## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 03.12.2016 | தூய பிரான்சிஸ் சவேரியார் - திருப்பலி | 02 |
| 04.12.2016 | திருவருகைக்காலம் இரண்டாம் ஞாயிறு - திருப்பலி | 03 |
| 07.12.2016 | தூய அம்புரோஸ் (அமிர்தநாதர்) - திருப்பலி | 04 |
| 08.12.2016 | மரியன்னையின் அமலோற்பவம் - திருப்பலி | 05 |
| 11.12.2016 | திருவருகைக் காலம் மூன்றாம் ஞாயிறு - திருப்பலி | 06 |
| 12.12.2016 | தூய குவாதெலூப் அன்னை - திருப்பலி | 07 |
| 13.12.2016 | தூய லூசியா - திருப்பலி | 08 |
| 14.12.2016 | தூய திருச்சிலுவை யோவான் - திருப்பலி | 09 |
| 18.12.2016 | திருவருகைக் காலம் நான்காம் ஞாயிறு - திருப்பலி | 11 |
| 25.12.2016 | கிறிஸ்து பிறப்பு பெருவிழா - திருப்பலி | 12 |
| 26.12.2016 | தூய ஸ்தேவான் (முடியப்பர்) - திருப்பலி | 13 |
| 27.12.2016 | தூய யோவான் (நற்செய்தியாளர்) - திருப்பலி | 14 |
| 28.12.2016 | மாசில்லா குழந்தைகள் தினவிழா - திருப்பலி | 15 |
| 29.12.2016 | தூய தாமஸ் பெக்கட் திருவிழா - திருப்பலி | 16 |
| 30.12.2016 | திருக்குடும்ப திருவிழா - திருப்பலி | 17 |


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


1. கிறிஸ்து பிறப்பும் இன்றைய சூழலும் 19
2. கிறிஸ்துமஸ் தாத்தா - வரலாறும் பொருளும் 20
3. தூய குவாதெலூப் அன்னையின் அற்புதம் 22
4. திருக்குடும்ப திருவிழா தரும் பாடங்கள் 24
5. திருச்சபை செய்திகள் 27

# பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

**03.12.2016 தூய பிரான்சிஸ் சவேரியார் திருப்பலி**

திருமதி. ராணிசம்பந்தன்

## முன்னுரை

இறை இயேசுவில் பிரியமானவர்களே, "கடவுளை அறியாத மக்கள் வசிக்கும் இடம் பூமியில் உள்ளது என்பதை நான் அறிந்தால் உணர்ந்தால் என்னால் அமைதியாய் இளைப்பாற முடியாது" என்று கூறிய தூய பிரான்சிஸ் சவேரியார் என்னும் புனிதரின் நாளை இன்று சிறப்பிக்கிறோம். இந்தியாவின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்ட நமது சவேரியார் 1506ல் உயர் செல்வந்தர் குடியில் பிறந்தவர். உலக போக்கின்படி புகழில் வாழ்ந்த இவர் பாரிஸ் நகரில் கல்வி கற்க சென்ற போது அங்கு புனித இஞ்ஞாசியாரை சந்தித்து அவர்மூலம் முற்றிலும் மனம்மாறி அவரின் சீடரானார்.

பின்னர் குருப்பட்டம் பெற்று இயேசு சபையில் சேர்ந்து மறைப்பரப்பு பணிக்காக 1541ல் இந்தியாவின் கோவாவுக்கு வந்து தன் செபத்தாலும், உழைப்பாலும் கோவா மக்களை நெறிப்படுத்தி மனந்திருப்பினார். லட்சம் மைல்கள் வெறுங்காலுடன் நடந்து 100க்கும் மேற்பட்ட ஊர்கள் சென்று பல இலட்சம் மக்களை மனந்திருப்பி பின் சீனா செல்லும் வழியில் நோய்வாய்ப்பட்டு 21.12.1552ல் உயிர் துறந்தார். இயேசுவின்மீது கொண்ட அளவற்ற அன்பு அவரது உடலை இன்னும் அப்படியே பாதுகாத்து கோவாவின் பசிலிக்காவாகிய "பான் ஜேசு" ஆலயத்தில் வைத்துள்ளது. இன்றைய புனிதர் பிரான்சிஸ் சவேரியார் ஆண்டவரின் சேவைக்கு தன்னையே அர்ப்பணித்ததைப்போல நற்செய்தியை வாழ்வாக்க நாமும் நம் சந்ததியினரை இறை அழைத்தலுக்கு ஒப்புக்கொடுப்போம் என்ற சிந்தனையோடு திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. நல்லாயனாம் இறைவா, "யாரை அனுப்புவேன் எனக்காக யார் போவார்கள்" என கேட்ட உம் குரலுக்கு "இதோ நானிருக்கிறேன் அடியேனை அனுப்பும்" என்று மொழிந்த எசாயாவை போன்று திருச்சபை தலைவர்கள் அனைவரும் தம்மை அழைத்த இயேசுவின்மீது தனியாத தாகம் கொண்டு மக்களின் ஈடேற்றத்திற்காக உழைக்கும் நல்ல இதயத்தை தரவேண்டுமென தூய பிரான்சிஸ் சவேரியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. திருச்சபையின் நாயகனே இறைவா, மனித பிறப்பில் மனித நேயத்தையும், திருமுழுக்கில் கிறிஸ்துவ நேயத்தையும், குருத்துவத்தில் பரிசுத்த ஆவியானவரின் நிலைப்பாட்டையும் திருமண அருட்சாதனத்தில் அர்ப்பண நேயத்தையும் மனித குலத்திற்கு

வழங்கும் வழிகாட்டியாக திகழ தூய பிரான்சிஸ் சவேரியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. தாயும் தந்தையுமான இறைவா, பிறக்கும்போது அநாதைக் குழந்தைகளாக பிறக்கும் மானிட வித்துக்களையும், முதிர்ந்த வயதில் அநாதைகளாக வாழும் முற்றிய பயிர்களையும் உம் வசம் ஒப்புவிக்கிறோம். அவர்களின் இயலாமையில் நீரே தாயும் தந்தையுமாய் அரவணைத்து, அவரின் தேவைகளை நிறைவு செய்து காத்துக்கொள்ளுமாறு தூய பிரான்சிஸ் சவேரியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 04.12.2016 திருவருகைக்காலம் இரண்டாம் ஞாயிறு திருப்பலி

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

### முன்னுரை

**"விரியன் பாம்பின் குட்டிகளே, மனம்மாறியதை செயலில் காட்டுங்கள்"**

திருவருகைக்காலத்தின் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை வாசகங்கள் நாம் மனம் மாறி வாழ நமக்கு அழைப்பு விடுகிறது. நற்செய்தி வாசகத்தில் திருமுழுக்கு யோவான் யோர்தான் நதிக்கரையில் திருமுழுக்குக் கொடுத்து யூதர்களை மனம் திரும்பி வாழ அழைக்கின்றார். திருமுழுக்கு யோவான் ஏழைகளின்மீது அன்பும், அக்கறையும், கரிசனையும் கொண்ட அமைதியின் அரசராகிய ஆண்டவர் இயேசுவின் வருகைக்காக மக்களைத் தயாரித்தார். அப்படித் தயாரிக்கும்போது அவர்கள் தங்கள் பாவத்திலிருந்து விலகி தூய வாழ்க்கை வாழ அழைக்கிறார். சவுலின் மனமாற்றம் செயலில் வெளிப்பட்டது. சக்கேயுவின் மனமாற்றம் பொருட்களை திருப்பி கொடுப்பதில் வெளிப்பட்டது. மனம்மாறும்போது ஏற்படும் புதிய பூமியை புதிய விண்ணகத்தை முதல் வாசகம் வழியாக எசாயா இறைவாக்கினர் விளக்குகிறார். ஆண்டவர் இயேசுவின் வருகைக்காக ஆவலோடு காத்திருக்கும் நாம் ஒவ்வொருவரும் மனம்மாறி கனிதரும் வாழ்க்கை வாழ வேண்டும் என்பதுதான் இறைவனின் திருவுளமாக இருக்கின்றது. அதற்காகவே மனம்மாறி கனிதரும் வாழ்க்கை வாழ்வோம் என வாக்களித்து பக்தியோடு இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. என் திருமலை முழுவதிலும் தீமை செய்வார் எவருமில்லை என்று மொழிந்த இறைவா, திருச்சபையை வழி நடத்தும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், வேதியர் மற்றும் பொதுநிலையினர் யாவரும் ஆண்டவர் இயேசுவின் வருகைக்காக மனம்மாறி கனிதரும் வாழ்க்கை வாழ வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. கற்களிலிருந்தும் ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை தோன்றச் செய்ய வல்லமைப் படைத்த இறைவா, அன்பின் ஆன்மிகத் தலைவர்கள் யாவரும் மக்கள்மீது பாயும் கோபம், பொறாமை, பழிவாங்கல் போன்ற குணங்கள் மறந்து, நீதி, நியாயம், நேர்மை, அன்பு, அமைதி எனும் பண்புகளைக் கொண்டு ஆட்சி செய்ய தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தூய ஆவி என்னும் நெருப்பால் திருமுழுக்குத் தந்தருளிய இறைவா, திருமுழுக்கு யோவானை எங்களுக்கு முன்மாதிரியாகத் தந்து, விண்ணரசு நெருங்கி விட்டது என உணர்த்தினீரே ஆண்டவருடைய வருகைக்காக எங்கள் உள்ளங்களை பரிசுத்தமாக ஆயத்தப்படுத்தத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 07.12.2016 தூய அம்புரோஸ் (அமிர்தநாதர்) திருப்பலி

திருமதி. ராணி வில்சன்

### முன்னுரை

**"ஒரு தலைவனின் முதற்பணியே பிறரிடம் நம்பிக்கையை நிலைபெறச் செய்வதே"**

தூய அம்புரோஸ் கி.பி. 340ல் பிறந்தார். இவரது தந்தை பிரான்சு ஆளுநராக பணியாற்றினார். சிறுவயதிலேயே இவரது தந்தை இறந்து விட்டார். தாயுடனும், சகோதரி புனித மர்செலினாவுடனும் உரோமை வந்தார். கவனமாக ஞான வாழ்வில் வளர்க்கப்பட்டார். சிறுவயதிலேயே கிரேக்க மொழியில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்ததால் கவிஞராகவும் சிறந்த பேச்சாளராகவும் விளங்கினார். இதனால் மன்னன் வலேரியன் இவரது திறமைக்கு பரிசளிப்பதுபோல் மிலானில் இருக்கச் செய்து ஆளுநராக நியமித்தார். இவரது காலத்தில் ஆரியூஸ் தப்பறை தலைவிரித்தாடியது. மிலானில் ஆரியப்பதித ஆயர் இறந்தபின் ஆரிய ஆயரா, கத்தோலிக்க ஆயரா என்ற மோதல் கிளம்பவே, அதற்கு முடிவு கட்ட ஒரு பேரவை நடந்தது. இவர் மிகத் திறமையாக பேசியதால் அனைவரின் பாராட்டுதல்களைப் பெற்று ஆயராக நியமிக்கப்பட்டு மக்கள் நலனுக்காகவே திருப்பலி நிறைவேற்றி இறையன்பை போதித்தார்.

குறிப்பாக கன்னிமையின் மேன்மைப் பற்றி அடிக்கடி பேசுவார். இதனால் பல இளம் பெண்கள் துறவு மேற்கொண்டனர். தன் அழைப்பிற்கும் திருஅவையின் ஒழுங்கிற்கும் ஏற்ப வாழ்ந்த இவர் கி.பி. 397ல் ஏப்ரல் 4ம் தேதி புனித வெள்ளியன்று இறைவனோடு இணைந்தார். இவரைப்போல அன்னையாம் திருஅவையின் உரிமைகளையும், மேலாண்மையையும் காப்பாற்ற நாம் போராட வேண்டும் அதற்காக இணைந்து செபிப்போம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, எங்கள் திருத்தந்தைக்காக மன்றாடுகிறோம். அன்று எத்தனை அடக்குமுறை துன்பங்கள் வந்தபோதும் புனித அம்புரோஸ் துணிவோடு இறையன்பை போதித்து அதன்படியே வாழ்ந்தார். அதுபோல இன்று வாழும் எம் திருத்தந்தை

பல அச்சுறுத்தல்களுக்கு ஆளாகினாலும் உமது அன்பாலும், பாதுகாப்பாலும் அவரது பணி தொடர அதனால் எங்கள் திருஅவையும் இவ்வுலகமும் புதுப்பொலிவு பெற்று இறையாட்சி மலர உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே இறைவா, தன்னலம் கருதாது சேவையே பெரிது என நினைத்து இறைப்பணி புரியும் அனைத்து இறை அருட்பணியாளர்களையும், அரசியல் தலைவர்களையும் ஆசீர்வதித்து மக்களின் நலனில் அக்கறைக்கொண்டு வழிநடத்திட வேண்டிய அனைத்து அருள்வரங்களை நிறைவாக பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கமே நிறைந்த இறைவா, திருவருகைக் காலத்தில் இருக்கும் நாங்கள் அனைவரும் ஆடம்பரங்களுக்கு அடிமையாகாமல் எளிமையை ஏற்று இரக்கச் செயல்கள்களைப் புரிந்து உமது திருமகன் பிறப்பை உலகறியச் செய்யவும் எங்களின் வாழ்வில் பிறருக்கு முன்மாதிரியாக வாழவும் வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 08.12.2016 மரியன்னையின் அமலோற்பவம் - பெருவிழா திருப்பலி

திருமதி. டிலைலா சேவியர்

### முன்னுரை

தந்தையாகிய கடவுள் மனிதனோடு கொண்டுள்ள முறிந்த உறவை புதுப்பித்து சரிசெய்ய அன்னை மரியாவைக் கருவியாகவும், பாலமாகவும் பயன்படுத்தினார். எனவே அன்னை மரியாவை ஜென்ம பாவத்திலிருந்து பாதுகாத்து தமது மீட்புத் திட்டத்தை நிறைவேற்றும் கருவியாக தயார்ப்படுத்தினார். இப்படி பாவக்கறைப் படியாத நிலைதான் அமல உற்பவம் என்று அழைக்கப்படுகிறது. இதைத்தான் "அருள்மிகப் பெற்றவரே வாழ்க" என்ற வானதூதரின் வாழ்த்தொலி உணர்த்துகிறது. அன்னை மரியாள் அமல உற்பவி என்ற உண்மையை திருத்தந்தை 9ம் பத்திநாதர் 1854ம் ஆண்டு டிசம்பர் திங்கள் எட்டாம் நாள் நம்பிக்கைக் கோட்பாடாக வரையறுத்துக் கூறினார். திருத்தந்தை தமது வழுவாவரத்தை பயன்படுத்தி நமக்கு கொடுத்த மாபெரும் பேருண்மையிது.

அன்னை மரியாவைப் போன்று அமல உற்பவமாக பிறக்கும் பேறு நமக்கு கிடைக்காவிட்டாலும் திருமுழுக்கின் மூலம் சென்மப் பாவத்திலிருந்து நாம் விடுதலை பெறுகிறோம். நாம் மாசற்றவர்களாக மாற வேண்டும் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் இறைமகன் இயேசுவைக் கடவுள் உலகிற்கு அனுப்பினார். அன்னை மரியாள் எப்படி ஆணவத்திற்கு சிறிதும் இடம் கொடாமல் தாழ்ச்சியோடு தியாகம் நிறைந்த உள்ளத்தோடு புனித வாழ்வு வாழ்ந்தாரோ அதுபோல நாமும் நமக்கு ஏற்படும் பல்வேறு சோதனைகளையும், இன்னல்களையும் அன்னையை முன்மாதிரியாகக் கொண்டு, அவர் வழியாக இறைவனிடம் சிறப்பாக மன்றாடுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. அன்பு இறைவா, உலகிலும் திருச்சபையிலும் அமைதி நிலவவேண்டுமென்றும் திருச்சபைத் தலைவர்கள் நல்ல உடல் உள்ள நலத்துடன் வாழவும், அவர்கள் செய்யும் பணிகளில் உமது அருளும், வல்லமையும் வழிநடத்துதலும் இருக்கவும், இதன் வழியாக இவர்கள் சிறப்பாக பணிசெய்து இறைவனுக்கு சாட்சியாகவும் சமுதாயத்திற்கு உதவும் கருவிகளாகவும் திகழவும் வேண்டிய வரத்தை தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. தூய்மையே இருப்பிடமான இறைவா, அமல உற்பவ அன்னையின் திருவிழாவை சிறப்பிக்கும் நாங்கள் பெற்ற திருமுழுக்கின் வழியாக தூய்மையான வாழ்வை எல்லா சூழ்நிலைகளிலிருந்து பாதுகாக்கவும், எங்களுடைய சோதனை நேரத்தில் மரியன்னையின் உதவியோடு, பாவச் செயல்களைப்புரியும் சூழ்நிலையை தவிர்க்க வேண்டிய மன உறுதியையும், தைரியத்தையும் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நம்பிக்கையின் இருப்பிடமே இறைவா, திருச்சபையில் பல இடங்களில் அமல அன்னையின் பெயரால் ஏற்படுத்தப்பட்டுள்ள இருபால் சபைகளில் உள்ளவர்கள் அனைவரும் நல்ல உடல் உள்ள நலம் பெறவேண்டியும், இவர்கள் தங்களின் வாக்குறுதிகள், கடமைகள், பணிகள் மூலமாக மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி அதன் வழியாக அன்னையின் பக்தியும் விசுவாசமும் வளர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 11.12.2016 திருவருகைக் காலம் மூன்றாம் ஞாயிறு திருப்பலி

திரு. ஜான் சுரேஷ்

### முன்னுரை

இறை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று நாம் ஆண்டவர் இயேசுவின் வருகைக்காக தயாரிக்கும் திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமையை சிறப்பிக்கின்றோம். இன்றைய வாசகங்கள் அனைத்தும் நமது வாழ்க்கை முறையை அலசிப் பார்க்க அழைப்பு விடுக்கின்றது. நான் எனது வாழ்வில் கிறிஸ்துவின் மதிப்பீடுகளை பறைசாற்றுகின்றேனா? நான் ஒரு கிறிஸ்தவன் என்பதை செயலில் வெளிப்படுத்துகின்றேனா? அல்லது வெறும் பெயரளவில் கிறிஸ்தவனாக உள்ளேனா? என்று சிந்திப்போம். நமது வாழ்வு கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழும் வாழ்வாக மாறவும், குழந்தை இயேசுவை உள்ளத்தில் வரவேற்கக்கூடிய தேவையான அருள் வேண்டியும், இத்திருப்பலியில் பக்தியோடும் முழு நம்பிக்கையோடும் பங்கேற்போம், இறையாசீர் பெறுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. அன்பின் இறைவா, எங்களை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் ஆகிய அனைவரும் மீட்பு அண்மையில் உள்ளதை உணர்ந்தவர்களாக எங்களை மீட்பளிக்கும் ஒளியாம் இயேசுவின் பாதையில் வழிநடத்திட வேண்டிய அருளை பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பிறருக்காக வாழ்வதே வாழ்வின் நிறைவு என்று உணர்த்திய இறைவா, நாட்டு தலைவர்கள் அரசியல்வாதிகள் தங்களது சுயநலத்தை விடுத்து பிறருக்காக, நாட்டு மக்களுக்காக நிறைவான வாழ்வு வேண்டிய வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நீதியின் இறைவா, எங்கள் நாட்டில் ஆங்காங்கே நடைபெறும் வன்முறைகள், பாலியல் வன்கொடுமைகள், கொலை, கொள்ளை ஆகிய தீமைகளிலிருந்து எங்களை காப்பாற்றி எங்களில் யாரும் இவ்வித தவறான பாதையில் சென்றுவிடாமல் உமக்குகந்த வாழ்வு வாழ வேண்டிய அருளைப்பொழிந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. முடிவற்ற வாழ்வை அளிக்கும் இறைவா, இறை வார்த்தைக்கு செவிமடுத்து மீட்பின் திட்டத்திற்கு தம்மையே அர்ப்பணித்த அன்னை மரியாளைப்போலவும், புனிதர்களைப்போலவும் இறைவார்த்தையை கேட்டு அதன்படி வாழ்ந்து நிறைவாழ்வை பெற்றுக்கொள்ள வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 12.12.2016 தூய குவாதெலூப் அன்னை திருப்பலி

திரு. ஜான் சுரேஷ்

### முன்னுரை

அன்னையின் அன்பு பக்தர்களே, இன்று நம் தாய் திருச்சபை தூய குவாதலூப் அன்னையின் திருநாளை பக்தியுடன் கொண்டாட அழைப்பு விடுகிறது. குவாதலூப் அன்னை 1531 டிசம்பர் 9ம் நாள் தூய யுவான் டியேகோ என்பவருக்கு தோன்றி தனக்கொரு ஆலயம் கட்டுமாறும் தானே அனைத்து மக்களுக்காக உயிரை தந்தவரும் விண்ணையும் மண்ணையும் படைத்தவருமான ஒரே கடவுளின் தாய் என்பதையும் வெளிப்படுத்தினார். என்னை நோக்கி கதறி அழுகிறவர்களுக்கு நானே இரக்கம் மிகுந்த தாய். அவர்களுடைய துயரம், வேதனை, புலம்பல் அனைத்தையும் நான் கேட்கிறேன். அவர்கள் அனைவரையும் என் இதயத்துக்கு நெருக்கமாக வைத்திருக்கிறேன் என்று வாக்குரைத்தார். அன்னையின் அன்பு பிள்ளைகளாக நம்பிக்கையுடன் நம் உள்ளத்திலுள்ள அனைத்து செபங்கள் எண்ணங்கள் ஏக்கங்கள் ஆகியவற்றை இறைவனிடம் ஒப்புக்கொடுத்து இப்பலியில் முழுமனதோடு இணைவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் நாயகனே எம் இறைவா, திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரையும் உம் திருமலர் பாதம் சமர்ப்பிக்கின்றோம். நீரே அவர்களை அரவணைத்து பாதுகாத்து நல்வழியில் நடத்திட வேண்டுமென்று தூய குவாதலூப் அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆற்றலின் நாயகனே எம் இறைவா, பல்வேறு இடங்களில் தங்களுடைய விசுவாசத்திற்காக துன்புறுத்தப்படும் கிறிஸ்தவர்களுக்காக வேண்டுகிறோம். நீரே அவர்களுக்கு ஆறுதலும், தேறுதலுமாய் இருந்து அவர்களை காத்தருள வேண்டுமென்று தூய குவாதலூப் அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. நலன்களின் ஊற்றே எம் இறைவா, தீராத நோய்களினால் அவதியுறும் விசுவாசிகளை உம் திருவடி அர்ப்பணிக்கின்றோம். நீரே உம் அருட்கரம் கொண்டு அவர்களை தொட்டு குணப்படுத்தியருள வேண்டுமென்று தூய குவாதலூப் அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 13.12.2016 தூய லூசியா திருப்பலி

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

### முன்னுரை

**"தூய்மையான உள்ளம் உடையோர், இறைவன் வாழும் ஆலயங்கள்"**

நமது தாயாம் திருச்சபை மறை சாட்சிகளை மாண்புபடுத்தி நம்மையும் அவ்வாறு வாழ அழைக்கிறது. பேரரசன் டயோக்கிளியஷியனின் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்தி சித்தரவதை செய்து சாகடித்துக் கொண்டிருந்தான். அந்த கொடூரமான காலத்தில்தான் பிரகாசியம்மாள் எனும் லூசியா செல்வந்தர் குடும்பத்தில் பிறந்து, ஏழைகளுக்கும் பகிர்ந்து கொடுத்து நல்லதொரு கிறிஸ்துவ வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தார். அவருடைய தாய் செல்வம் படைத்த ஓர் இளைஞனுக்கு லூசியாவின் விருப்பத்திற்கு மாறாக நிச்சயம் செய்து விட்டாள். இளைஞனும் உரிமையோடு லூசியாவைக் காண வந்தான். அவனிடம் பக்குவமாக, தான் தன்னுடைய கற்பை ஆண்டவர் இயேசுவுக்கு அர்ப்பணித்து விட்டதையும் அதனால் யாரையும் மணந்து கொள்ளப்போவதில்லை என்றும் உறுதியாகக் கூறிவிட்டாள் லூசியா. ஆத்திரமடைந்த இளைஞன் பேரரசனிடம் லூசியா ஒரு கிறிஸ்தவள் என்று காட்டிக் கொடுத்து விட்டான்.

அரசனுடைய ஆட்கள், லூசியாவை பிடித்துக்கொண்டு போய் விறகு கட்டைகளை அவள்மீது அடுக்கி தீயை வைத்தனர். ஆனால் அந்த நெருப்பு லூசியாவை சுட்டெரிக்கவில்லை. கோபமடைந்த பேரரசன் டயோக்கிளியன்

வாளால் தலையை வெட்டித்துண்டித்தான். பிரகாசியம்மாள் ஆண்டவரோடு பிரகாசத்துடன் ஐக்கியமாகி வேதசாட்சியாக மரித்தாள். நாமும் நமது விசுவாசத்தில் இறுதிவரை உறுதியுடன் வாழ்ந்து மீட்புப் பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. ஆண்டவரே உம்மைப் பின் தொடர்பவரே வாழ்வின் ஒளியைக் கொண்டிருப்பார் என்பதைத் தெளிவுப்படுத்திய இறைவா, சட்டங்களைக் கடைப்பிடிப்பவர்கள் வாழ்வின் ஒளியைக் கொண்டிருப்பர் எனும் உண்மையை உணர்ந்து எங்களை இறைவழிப் பாதையில் நடத்தி செல்லும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், வேதியர்கள் மற்றும் பொதுநிலையினர் அனைவருக்கும் விசுவாச ஒளியில், உம் சித்தப்படி வாழத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தக்க தருணத்தில் நான் மக்களினங்களுக்குத் தூய நாவினை அருள்வேன் எனக்கூறிய இறைவா, இறுதிவரை மனஉறுதியுடன் வாழ்ந்து மறைசாட்சியாக மரித்த லூசியாவைப்போல இன்றைய இளைஞர்கள், இளம்பெண்கள், உலக மாயையைத்துறந்து நிரந்தரமான இறையரசின் மக்களாக வாழவும், கிறிஸ்துவ வாழ்வில் முன்னோடிகளாக வாழ்ந்து சாட்சி பகரவும் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தூய உள்ளத்தோர் இறைவனைக் காண்பர் என மொழிந்த இறைவா, ஏழை எளியவர்களை உன் நடுவில் விட்டு வைப்பேன் அவர்கள் ஆண்டவரின் பெயரில் நம்பிக்கைக் கொள்வார்கள் எனக் கூறிய ஆண்டவரே, தூய லூசியா தம்மிடமிருந்த செல்வத்தை இல்லாதவர்களுக்கு பகிர்ந்தளித்து வாழ்ந்ததுபோல், நாங்களும் வாழ நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 14.12.2016 தூய திருச்சிலுவை யோவான் திருப்பலி

திருமதி. ராணிசம்பந்தன்

### முன்னுரை

இறையேசுவின் இனிய மக்களே, ஸ்பெயின் நாட்டிலுள்ள போத்தி பரோஸ் என்னும் ஊரில் ஏழையான பெற்றோருக்கு 1542ம் ஆண்டு பிறந்தவர் புனித சிலுவை யோவான். கல்வியறிவு பெற வசதியில்லா நிலையில் நோயாளிகளுக்கு சேவை செய்யும் தொழிலை செய்தவர். பின்னர் கார்மேல் சபையில் சேர்ந்து பணியாற்றியபோது இவரின் திறமையைக் கண்டு வியந்து குருப்பட்டம் தரப்பட்டது. கடுமையான தவ வாழ்வை விரும்பிய இவர் வேறொரு சபையில் சேர நினைத்தபோது புனித அவிலா தெரசம்மாள் கார்மேல் சபையிலேயே தனக்கு உதவியாக இருந்து

சபையை சீர்த்திருத்த வேண்டிக் கொண்டார். அதை ஏற்று சபைக்காக உழைத்து வந்தவர். ஒருமுறை கடுமையான நோயில் வருந்தியபோது கூட வசதியே இல்லாத ஒரு மடத்தை தேர்ந்தெடுத்து இயேசுவுக்காக வேதனைப்பட வேண்டி அங்கு சிலுவையை பிடித்துக் கொண்டே தன் உயிரை அமைதியாக துறந்தார்.

இன்றைய வாசகங்களில் இறைவன் "நானே ஆண்டவர். எல்லாவற்றையும் செய்ய வல்லவரும் விடுதலைத் தருபவரும் நானே" என்கிறார். அதையே நற்செய்தியிலும் எங்கே துன்பம் துடைக்கப்படுகிறதோ, எங்கே துக்கம் மகிழ்ச்சியாக மாறுகிறதோ, எங்கே துயரமும் தேவனைகளும் மரணமும் அழிக்கப்படுகிறதோ அங்கே இறையரசு உள்ளது என்றும், நமதாண்டவர் இயேசு இரட்சகனும் ஊழியனும் ஆவார் என்பதை உணர்த்தவே எல்லாவித பிணிகளையும் துன்பங்களையும் குணமாக்கினார் என்று கூறப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் தியானித்து இன்றைய புனிதரான தூய சிலுவை யோவான் செயல்பட்டதைப்போல் உலக வசதிகள், வாய்ப்புகள், சொகுசுகள் இவைகள்மேல் மிதமிஞ்சிய பற்றில்லாமல் தூய வாழ்வு வாழ இத்திருப்பலியில் வரம்வேண்டுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. ஆற்றலின் ஊற்றே இறைவா, உமது பணியைத் தொடர்ந்து நிறைவேற்றும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், பொதுநிலையினர் அனைவரும் இறை சேவையில் வளர்ச்சியடைய சீரிய சிந்தனையுடனும், நல்ல மனதுடனும் ஒன்றித்து பணியாற்றும் ஆற்றலை வழங்கிட உம்மை மன்றாடுகிறோம்.

2. உறுதி தரும் இறைவா, "பொதுநலனே தன் நலன்" என்னும் சிந்தனையிலிருந்து "சுயநலனே தன்நலன்" என்று மாறிக்கொண்டு வரும் இச்சமுதாயத்தில் பிறந்து வளர்ந்து தன்னிலை இழக்காமல் பிறர்நலன் கருதி சேவைபுரியும் மனநிலையை தரவும், தன் சிலுவையைத் தானே சுமந்த தூய சிலுவை யோவான் போல மனஉறுதியுடன் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் இறைவா, மண்ணுலகில் வாழும் உம் மக்களின்மேல் கருணையும், அதிலும் "பாவிகளுக்காக நான் சிலுவை ஏற்றேன்" என்று பதிலுரைத்த உம் சொல்லொண்ணா இரக்கத்தையும் நினைத்து மானிட மக்களாகிய நாங்கள் மனந்திருந்தி எக்காலமும் உம்மீது விசுவாசமாய் வாழ உம்மை மன்றாடுகிறோம்.

**18.12.2016 திருவருகைக் காலம் நான்காம் ஞாயிறு திருப்பலி**

திருமதி. டிலைலா சேவியர்

## முன்னுரை

இறை இயேசுவில் இனியோரே, ஒரு குடும்பத்திலுள்ள கணவனும் மனைவியும் எவ்வளவுதான் பாசத்தோடும், அன்போடும், ஒற்றுமையோடும் இருந்தாலும் அவர்களின் குடும்பத்திற்கு மன நிறைவைத் தருவது அவர்கள் பெற்றெடுக்கும் குழந்தைகள்தான். குழந்தைகளால் குடும்பங்களில் சமாதானமும் சந்தோஷமும் உருவாகின்றது. இவ்வாறு மகிழ்ச்சியை நமக்கு தரக்கூடிய குழந்தையின் (இயேசுவின்) பிறப்பின் முன்னறிவிப்பைத்தான் திருவருகைக் காலத்தின் நான்காம் ஞாயிறன்று வாசிக்கப்படும் மூன்று வாசகங்களும் தெளிவுப்படுத்துகின்றது. இம்மானுவேல் என்றால் இறைவன் நம்மோடு என்று பொருள் தருவதால் இயேசு நம்மோடு வாழ பிறக்கப்போகிறார், நம்மோடு வாழ நம் இல்லத்திலும் உள்ளத்திலும் வாழ வருகின்றார். நம்மிடையே தங்கி நம்மோடு வாழ விரும்பும் இறைவனை நம் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள நம்மையே நாம் தூய்மையாக்கிக் கொள்ள இறைவனின் கட்டளைகளை கடைப்பிடிப்போம் பிறக்கப்போகும் குழந்தை இயேசுவுக்கு ஏற்ற இல்லிடமாக நம்மை மாற்றிக்கொள்ள வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. அன்பின் தந்தையே, திருச்சபையை நல்வழியில் நடத்திக்கொண்டிருக்கும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவரையும் உமது பாதுகாப்பில் வைக்கின்றோம். இவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை தங்களின் சாட்சிய வாழ்வின் மூலமாக அனைவரையும் நிலைவாழ்விற்கு இட்டுச்செல்லும் வரத்தை தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. விடுதலையின் நாயகனே எம் இறைவா, இன்றைய காலகட்டத்தில் எங்கள் நாட்டில், சமுதாயத்தில், குடும்பங்களில், சமூக அமைப்புகளில், மத அமைப்புகள் போன்றவைகளில் ஏற்பட்டுள்ள குழப்பங்கள், அநீதிகள், வேற்றுமைகள், பிளவுகள், வெறுப்புணர்ச்சி, தன்னல உணர்வு போன்ற தீயக் கட்டுகளிலிருந்து விடுதலைப் பெற்று உண்மையான மனித நேயம் எங்கும் மலர உமது வல்லமையைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. விண்ணரசின் தலைவரே, திருவருகைக் காலத்தை சிறப்பித்துக்கொண்டிருக்கும் நாங்கள் அனைவரும் ஆழமான செபவாழ்க்கை அருட்சாதனங்களை அடிக்கடி பெறுதல், இடைவிடாது செபித்தல், பிறருக்கு உள்ளன்போடு இரக்க செயல்கள் செய்தல்

போன்ற நற்பண்புகளால் பிறக்கப்போகும் குழந்தை இயேசுவை நம் உள்ளத்தில் ஏற்கும் நல்ல பரந்த இதயமாக மாற்றும் வரம் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 25.12.2016 கிறிஸ்து பிறப்பு பெருவிழா திருப்பலி

திரு. இம்மானுவேல் ஜெயராஜ்

**முன்னுரை**

சூரியன் உதித்ததால் இருள் விலகியது
மேகம் சிந்தியதால் உலகம் செழித்தது
மலர்கள் மலர்ந்ததால் மனம் கமழ்ந்தது
இயேசுவின் பிறப்பால் பாவ இருள் விலகியது
அவர் இரத்தம் சிந்தியதால் புதுவாழ்வு கிடைத்தது
அவரின் போதனைகள் நம்மிடையே வாசம் செய்கின்றது

உலக சரித்திரத்தை புரட்டிப்போட்ட சரித்திர நாயகன் பரிசேயர், சதுசேயர், அரசர்கள், அறிஞர்கள் அனைவருக்கும் சிம்ம சொப்பனமானார். ஏழை, எளிய மக்களின் விடுதலை நாயகனாக விளங்கிய நம் மாபரன் மாட்டுக் குடிலில் பிறந்த உலகமகா செல்வந்தர். தன் போதனைகளாலும், அருளடையாளங்களாலும் மக்களின் மனமென்னும் அரச பீடத்தில் நிலையான ஆட்சியுரிமை பெற்றவர்.

மனிதன் இறைத்தன்மை பெறுவது இறைமை. இறைவன் மனிதனாக பிறப்பது இரக்கத்தின் உச்சம். கன்னியின் வயிற்றில் தூய ஆவியால் கருவாகி, தாவீது குலத்தில் யோசேப்பின் பராமரிப்பில், கால்நடைகளின் மத்தியில், இடையர்களும், சாமக் காவலர்களும் கண்டுகளிக்க, ஞானிகள் மண்டியிட்டு வணங்க, இம்மண்ணில் பிறந்த இறைவனின் பிறப்பை மகிழ்ச்சியாக கொண்டாட இவ்வாலயத்தில் கூடியுள்ளோம்.

உலக மக்கள் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்ற உணர்வோடு இக்கிறிஸ்துமஸ் பெருவிழாவை அர்த்தமுள்ளதாக்கிட, இத்திருப்பலியில் நம்மிடமுள்ள அனைத்து பேதங்களும் ஒழிந்து, ஒருவர் மற்றவரை மதித்து மனித நேயத்துடன் வாழும் நல்இதயத்தை தரவும், இயேசுவின் போதனைப்படி நாமும் குழந்தைகளைப்போல் கள்ளம் கபடமற்றவர்களாக வாழும் வரம் வேண்டியும் இக்கிறிஸ்துமஸ் பெருவிழா சிறப்புற இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கு பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. நம் கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை மற்றும் அனைத்துகர்தினால்மார்கள்,ஆயர்கள்,குருக்கள்,கன்னியர்கள்,இறை ஊழியர்கள் அனைவரும் மக்களை நாடிச் சென்று அவர்களின் ஆன்ம தேவைகளில் சிறப்பான உதவிகள் செய்து தம்மை வெறுமையாக்கி

இயேசுவை வெளிப்படுத்தும் ஊழியர்களாக வாழ அவர்கள் பெற்றுள்ள அனைத்து கொடைகளுக்காகவும் நன்றி கூறிவோம்.

2. உலக நாடுகளை ஆளும் ஆட்சியாளர்கள் அரசு அதிகாரிகள் ஊர் தலைவர்கள் தாங்கள் ஏற்றுள்ள பதவிகளை சுயலாபத்திற்காக பயன்படுத்தாமல் தன்னலமற்ற இதயத்தோடு "என் கடன் பணி செய்வதே" என்ற வார்த்தைக்கேற்ப நாட்டு நலப்பணிகளையும், மக்கள் நலப்பணிகளையும் தூய கரத்துடன் தங்கள் கடமைகளை பொறுப்புடன் நிறைவேற்ற இறைவன் அவர்களுக்கு தந்துள்ள அனைத்து நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.

3. உலகிலுள்ள குடும்பங்களில் நிலவும் துன்பங்கள், வறுமை, பிளவுகள், வேலையின்மை காரணமாக உலகில் பாவங்களும், தீயபழக்க வழக்கங்களும், மனித நேயமற்ற செயல்பாடுகளும் முற்றிலுமாக வேரறுக்கப்பட்டு குடும்பங்களில் அமைதி, சமாதானம், ஒற்றுமை, தியாகம், பக்தி, செபம் இவற்றால் குடும்பங்கள் கட்டியெழுப்பப்பட இறைவன் திருக்குடும்பத்தில் பிறந்ததுபோல் நம் அனைத்து குடும்பங்களிலும் பிறந்துள்ளதால் நன்றி கூறுவோம்.

4. ஆண்டவரே நாங்கள் எங்கள் நாவால் பிறரை புண்படுத்தாமலும், பிறருக்கு துன்பம் விளைவிக்காமலும் உம் வார்த்தைகளை எடுத்துக்கூறவே அந்நாவை நாங்கள் பயன்படுத்தும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 26.12.2016 தூய ஸ்தேவான் (முடியப்பர்) திருப்பலி

திருமதி. ராணி வில்சன்

### முன்னுரை

உன் பகைவர்களுக்கு அன்பு செலுத்து என்ற இறை வார்த்தைக்கேற்ப வாழ்ந்து சான்று பகிர்ந்தவர் புனித முடியப்பர். இவர் இறந்தது கி.பி. 36 இவர் அருளும் ஆற்றலும் பெற்றவர். மக்களிடையே மாபெரும் அருட்செயல்களை செய்து வந்தார். அவரின் வழியாக இறை இயேசுவின் மகிமை நாளுக்கு நாள் மக்களிடையே அதிகரித்தது. இதைப் பொறுத்துக்கொள்ள இயலாதவர்கள் அவரை தலைமை சங்கத்தினரிடம் இழுத்து வந்து பொய் சாட்சிகளை ஏற்படுத்தி குற்றம் சுமத்தினர். ஆனால் அவரது ஞானத்தின் முன்னும், அவர் வழியாகப் பேசின தூய ஆவியின் முன்னும் அவர்களால் எதிர்த்து நிற்க இயலவில்லை. சங்கத்தில் அமர்ந்திருந்த அனைவரும் அவரை உற்று நோக்கியபோது அவரது முகம் வானதூதரைப்போல் இருப்பதை கண்டனர்.

தூய ஸ்தேவானோ தனக்கு நேரும் துன்பமும் அதனால் உயிர் பறிபோகும்என அறிந்தும்,அஞ்சா நெஞ்சோடுதூய ஆவியில்நிறைந்தவராய் வானத்தை உற்று நோக்கி அங்கே இறைவனின் மாட்சிமைகளையும் அவரது வலப்பக்கத்தில் இறை இயேசு நிற்பதையும் கண்டு, "இதோ வானம்

மின்னுவதையும் மனுமகன் நிற்பதையும் காண்கிறேன்" என்றார். அன்பு கிறிஸ்துவை விண்ணகத்தினின்று மண்ணகத்திற்கு கொண்டு வந்தது. அதே அன்பு, தூய ஸ்தேவானை மண்ணினின்று விண்ணிற்கு எடுத்துச் சென்றது இந்த மங்காத மணிமுடியை இவர்பெற கருவியாக இருந்தது அன்பு. இதனால் இவர் எங்கும் வெற்றி பெற்றார். நமக்கு இந்த பாக்கியம் கிடைக்குமா? கிடைக்க நாம் பகைவரையும் கருணையோடு நோக்கி செயல்பட இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, எங்கள் தாய் திருஅவையின் இறைப்பணியாளர்களான திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் தூய ஸ்தேவானைப்போன்று எதிர்ப்பவரை அன்போடும் கனிவோடும் நோக்கி ஆதரித்து அரவணைக்கவும் இறை இயேசுவின் அன்பை உலகிற்கு வெளிப்படுத்தவும் வேண்டிய ஆற்றலை இவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. மன்னிக்கும் இறைவா, குடும்பம் ஒரு கோவில், குடும்பம் ஒரு பல்கலைக் கழகம். ஆகவே குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டு தவறிழைக்கும்போது அன்போடும் கருணை-யோடும் விட்டுக்கொடுத்து வாழவும், குடும்பம் கோவிலாக பல்கலைக் கழகமாக மாற எல்லா வரங்களையும் கொடுத்து வழிநடத்திட உம்மை மன்றாடுகிறோம்.

3. தூய ஆவியை எமக்களித்த இறைவா, தூய ஸ்தேவான் பெற்றுக்கொண்ட அதே தூய ஆவியை எங்கள் அனைவர் மேலும், உலக மக்கள் மேலும் பொழிய உம்மை வேண்டுகிறோம். தீய சக்திகள் அனைத்தும் ஒழிந்து, மக்கள் அனைவரும் இறை இயேசுவின் ஒளியில் பிரகாசிக்க வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 27.12.2016 தூய யோவான் (நற்செய்தியாளர்) திருப்பலி

திரு. D.V.R. ராஜா

### முன்னுரை

தூய யோவான் நற்செய்தி ஆசிரியர் செபதேயுவின் மகன், கிறிஸ்துவின் அழைப்புக்குமுன் மீன்பிடி தொழில் செய்தவர். இவர் இயேசுவுக்காக அனைத்தையும் உதறிவிட்டு இயேசுவைப் பின்பற்றியவரும் அவரின் அன்பு சீடருமாவார். இவர் விவிலியக் குறிப்பில் அநேக இடங்களில் இயேசுவோடு இணைந்திருந்தவர். அவரின் மார்பில் சாய்ந்திருக்கும் அளவுக்கு அன்பும் நெருக்கமும் கொண்டவராய் இருந்தார். இந்தப் புனிதரின் விழாவை திருச்சபை இன்று கொண்டாடுகிறது. இயேசு அழைத்த தருணமே அனைத்தையும் விட்டுவிட்டு அவரை பின்பற்றி அவரோடிருந்த அன்பு சீடர் இவர். யோவான் நற்செய்தியை வாசிக்கும்போது அதன்

சிறப்பும் தனித்தன்மையும் புலப்படும். இந்நற்செய்தியில் இயேசு தான் மெசியா என்ற சாட்சியமளிக்கும் விதமாகவும் அவரில் ஆழ்ந்த இறை நம்பிக்கையும் விசுவாசமும் கொள்ள அவரே வாழ்வு, வழி, ஒளி, உண்மை என்பதை அறியவும், இறையாட்சிக்கு தகுதியுடையவராய் மாறவும் நம்மை அழைக்கிறன்றது. அழைப்பை ஏற்போம் இறைப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பு இறைவா, எமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார் இவர்களின் ஆன்ம சரீர நலன்களைப் பாதுகாத்து இவர்கள் செய்யும் பணி எடுக்கும் முயற்சிகள் திருச்சபையின் வளர்ச்சிக்கும் இறை மக்கள் முன்னேற்றத்திற்கும் பயனுள்ளதாய் அமைந்து திருச்சபை மென்மேலும் வலுப்பெற்று வளர்ச்சியடைய பயன்படுத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பு இறைவா, எமது நாட்டையாளுகின்ற தலைவர்கள் ஒவ்வொருவரும் சுயநலம் விடுத்து, தங்கள் மக்களின் பிரதிநிதிகள் என்பதை நினைவில் கொண்டு எல்லா மக்களும் இயல்பாக வாழும் சூழலை ஏற்படுத்தி, அன்பும் அமைதியும் நிலவ மக்கள் அச்சமின்றி வாழவும் உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பு இறைவா, இளைஞர் இளம் பெண்களை ஆசீர்வதியும். முதலில் இறையரசை தேடுங்கள் பின்னர் அனைத்தும் உங்களுக்கு சேர்த்துக் கொடுக்கப்படும் என்ற இறைவார்த்தையை மனதில் கொண்டு அதன்படி நடந்து கல்வியிலும் அறிவிலும் இறைஞானத்திலும் சிறந்து விளங்கி இவர்களின் எண்ணங்களையும், எதிர்ப்பார்ப்புக்களையும் நீர் நிறைவேற்றி நல்ல வேலையையும் நல்ல வாழ்க்கைத் துணையையும் நல்ல எதிர்காலத்தையும் நீர்தாமே கொடுத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 28.12.2016 மாசில்லா குழந்தைகள் தினவிழா திருப்பலி

திரு. ஹென்றி ஸ்டீபன்

**முன்னுரை**

இன்றைய திருவழிபாட்டு கொண்டாட்டத்திற்கு வருகை தந்திருக்கும் அன்பு இறைமக்களே, ஒரு தீவிரவாதியைப்போல் பெத்லகேமுக்கு அருகில் இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தைகளை வாளுக்கு இரையாக்கிய அரக்கச் செயலை இந்நாள் திருச்சபை நினைவு கூர்கின்றது. மாசுமருவற்ற இக்குழந்தைகள் கிறிஸ்துவுக்காக செந்நீர் சிந்திய முதல் வேதசாட்சிகள். இன்றும் ஏரோதின் மனநிலைக்கொண்ட தலைவர்களும், கல்நெஞ்சர்களும் நடமாடிக்கொண்டு எங்குப் பார்த்தாலும் கொலை, கொள்ளை, சுரண்டல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளனர். குடும்பத்தில் சுயநலம், தேர்தல் காலங்களில் அரங்கேரும் கொலைகள்,

கொத்தடிமைகள், பாலியல் வன்கொடுமைகள் ஆகியவற்றின் நிலையறிந்து நெஞ்சம் கொதிக்கின்றோமா? இத்தகைய சமூக அநீதிகளுக்கு விடிவுகாலம் கிடைக்கவும், அவற்றிற்கு தலைவணங்காத உள்ளத்தை தரவும் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. என்றும் வாழும் இறைவா, எம் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவியர்களின் விசுவாசத்திற்கு எதிராக எழும் பிரச்சனைகளும், தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களும், நிகழும்போது அதனை முறியடிக்க வலுவற்ற நிலையிலிருந்து வலுப்பெற்று இறை சாட்சிகளாய் வாழ்ந்து திருச்சபையை காத்திட உமது ஆசீரும் அருளும் தரவேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பு இறைவா, பிறக்கப்போகும் குழந்தைகளை வேண்டாமென்று கருவிலே அழிக்க நினைக்கும் பெற்றோரை மன்னித்து அவர்கள் தங்கள் தவறை உணர்ந்து இறைவன் சித்தம் எதுவோ அதை ஏற்றுக்கொள்ளும் நல்ல மனதைத் தர உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கமே உருவான இறைவா, ஏழை, அனாதை, கைவிடப்பட்ட அனைத்து குழந்தைகளையும் திக்கற்றவர்களாக விட்டுவிடாமல் அவர்களும் உமது சாயலாக படைக்கப்பட்டவர்கள் என்பதை உணர்ந்து அவர்களை ஏற்று பாதுகாத்து நல்வாழ்வளிக்க முன்வருவோரை நீர் ஆசீர்வதிக்கவும், அவர்களுக்கு மனஉறுதியையும் உமது அருளையும் நிறைவாக பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 29-12-2016 தூய தாமஸ் பெக்கட் திருவிழா திருப்பலி

திரு. ஜான் அலெக்சாண்டர்

**முன்னுரை**

அன்புக்குரியவர்களே, இன்று திருஅவையானது அருட்தந்தையர்களின் பாதுகாவலர் தூய தாமஸ் பெக்கட் அவர்களின் விழாவினை கொண்டாடுகிறது. இளவயதிலேயே குடும்பத்தைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்ற தாமஸ், கான்டர்புரி பேராயர் இல்லத்தில் பணியாளராக சேர்ந்தார். இவரது நேர்மை, பணியாற்றும் விதம் ஆகியவையால் ஈர்க்கப்பட்ட பேராயர் இவரை படிக்க வைத்து, 1154ல் திருத்தொண்டராக அருட்பொழிவு செய்து பிறகு அரசர் 2ம் ஹென்றியின் அரசவையில் அரசனுக்கு அடுத்த நிலையில் பொறுப்பில் அமர்த்தப்பட்டார். பேராயரின் மறைவுக்கு பின் தாமஸ் புதிய பேராயராக அருள்பொழிவு பெற்றார். முதல் பணியாக நோன்பிருந்து செபித்து இறைப்பணிக்காகத் தம்மை முழுமையாகத் தயாரித்தார். முன்பு அனுபவித்த அனைத்து வசதிகளையும் அரசு வேலையையும் துறந்தார். இதை எதிர்பார்க்காத அரசர் தாமஸுக்கு பல தொல்லைகள் கொடுத்து வந்தார். உச்சக்கட்டமாக யார்க் பேராயர், லண்டன் ஆயர், சால்ஸ்பர்ரி ஆயர் மூவரும் சேர்ந்து

இளவரசர் ஹென்றியை யார்க்கில் அரசராக முடிசூட்டியதால், கான்றர்பரி சலுகையை மீறிய செயலுக்கு அம்மூவரையும் தாமஸ் திருச்சபையிலிருந்து நீக்கம் செய்தார். இதனால் 1170 டிசம்பர் 29, அன்று மாலை ஆராதனையில் இருந்தார் தாமஸ். நேரே பீடத்திற்கு சென்ற கயவர்கள் பீடத்திலேயே தாமஸை கொலை செய்தார்கள். திருச்சபையின் மாண்பை கட்டிக்காத்த தாமஸ் பெக்கட் மறைச்சாட்சியாக தனது வாழ்வை இறைவனிடம் கையளித்தார். அவரின் விழாவை நினைவுகூறும் நாமும், நம் பொறுப்பில் நீதியுடனும் நேர்மையுடனும் செயல்பட வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, எங்களைத் தூய்மைப்படுத்தும். எங்களுடைய மனம், சிந்தனை, ஏக்கங்கள் அனைத்தையும் உம்மிடம் ஒப்புக்கொடுக்கிறோம். நாங்கள் இனி எங்களுக்காக மட்டும் வாழாமல் எங்களுக்காக மரித்து உயிர்த்த உமக்காக வாழும் வரத்தை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. தூய்மை என்பது வெளியிலிருந்து வருவதல்ல மாறாக உள்ளார்ந்த விதத்தில் மனமாற்றம் பெற்று நம் செல்வத்தைப் பிறரோடு பகிர்ந்துகொள்ளும்போது நாம் தூயவர்களாக மாறி சமத்துவ சமுதாயம் உருவாக உழைத்திட தேவையான வரத்தை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. வெறும் சடங்குகளில் நாங்கள் அக்கறை கொள்ளாமல் அவை குறிக்கின்ற உள்கருத்து நலமான சிந்தனையும் அதிலிருந்து பிறக்கின்ற நலமான செயலும் எங்கள் வாழ்வில் துலங்க வேண்டும் என்ற இயேசுவின் போதனையை உணர வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 30.12.2016 திருக்குடும்ப திருவிழா திருப்பலி

திரு. P. விக்டர்

**முன்னுரை**

அன்பார்ந்தவர்களே, இன்று நாம் திருக்குடும்பத்தின் திருவிழாவைச் சிறப்பிக்கின்றோம். நமது கத்தோலிக்க திருவழிபாட்டு நாற்காட்டியில் ஆண்டின் பொதுக்காலத்தின் கடைசி ஞாயிறை திருக்குடும்பத் திருவிழாவாக சிறப்பிக்கின்றோம். திருவிவிலியத்தில் இயேசுவின் பிறப்பு நிகழ்வின்போதும் ஏரோது மன்னனுக்குப் பயந்து எகிப்துக்குப் போனபோதும், இயேசுவை ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த நிகழ்வின்போதும் மற்றும் 12 வயதில் இயேசு காணமற்போனபோது நடந்த நிகழ்வின் போதும் திருக்குடும்பத்தை நாம் காண முடிகிறது. திருக்குடும்பம் நம்முடைய குடும்பங்களுக்கெல்லாம்

முன்மாதிரியான குடும்பமாகப் போற்றப்படுகிறது. உத்தமனும் நீதியுமான கணவன், ஆண்டவரது பாராட்டைப் பெற்றாலும் "இதோ உமது அடிமை" என்று தன்னைத் தாழ்த்திக் கொண்ட மனைவி, இறை சித்தம் நிறைவேற்ற வந்து இவர்களுக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்திருந்த மகன்-இயேசு: இவர்கள் குடும்பத்தை திருக்குடும்பம் என்று சொல்வதில் தவறேதும் இல்லை அது பொருத்தமானதேயாகும்.

திருக்குடும்ப திருவிழாவை பல ஆண்டுகளாகக் கொண்டாடி வந்தாலும் திருத்தந்தை 13ம் சிங்கராயர் 1893ம் ஆண்டு திருச்சபையின் அதிகாரப்பூர்வ விழாவாக இதை அறிவித்தார். அதைத் தொடர்ந்து உலகமெங்கும் இன்று இவ்விழா கொண்டாடப்பட்டு வருகிறது. திருக்குடும்பத்தின் மாதிரியைப் பின்பற்றி நம் குடும்பத்தை அமைத்துக்கொள்வோம். அதற்கான வரம்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, இவ்வுலகில் வாழ்ந்த திருக்குடும்பத்தில் காணப்பட்ட அன்பு, பணிவு, தெய்வ பயம், கீழ்ப்படிதல், விவிலிய அறிவு ஆகிய பண்புகள் எங்கள் குடும்பங்களிலும் காணப்பட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பால் எம்மை ஆட்கொண்ட இறைவா, திருக்குடும்ப திருவிழாவைக் கொண்டாடும் இந்நாளில் திருச்சபை என்ற எங்களது பெரிய குடும்பத்தில் அதனை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவிகளுக்கு திருக்குடும்பத்தின் தலைவர் புனித யோசேப்பின் பண்புகளை வழங்கி திருச்சபையை சிறப்பாக வழிநடத்தும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. என்றும் உயிரோடு வாழும் உண்மை இறைவா, திருக்குடும்பத்தின் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்த இறைமகன் இயேசுவைப் போல திருச்சபையின் உண்மையான போதனைகளுக்கு நாங்கள் யாவரும் எப்பொழுதும் கீழ்ப்படிந்து வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை டிசம்பர் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியை குறிப்பிடவும்)

# பகுதி - 2

## 1. கிறிஸ்து பிறப்பும் இன்றைய சூழலும்

திரு. விக்டர்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இறைமகன் இயேசு இவ்வுலகில் மனிதனாக அவதரித்த விழாவை நாம் "கிறிஸ்துமஸ்" என்கிற பெயரில் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். உலக வரலாற்றில் மனித அவதாரம் எடுத்த ஒரே கடவுள் நமதாண்டவர் இயேசு ஒருவர் மட்டுமே. நம் இந்தியாவில் அநேக மதங்கள் தோன்றின, ஆனால் எந்த மதத்தலைவரும் தன்னைக் கடவுள் என்று சொல்லிக்கொண்டது கிடையாது. கடவுளை அடைவதற்கான வழிகளைக் காட்டுபவர்களாகவும் வழிகாட்டிகளாகவுமே காணப்படுகின்றனர். சிலர் மக்களின் அறியாமையையும், மூட நம்பிக்கைகளையும் பயன்படுத்தி தங்களையே கடவுள்களாக காண்பித்து வருகின்றனர்.

**இறைமகன் இயேசுவின் பிறப்பு அவசியம்தானா? அவர் ஏன் பிறக்க வேண்டும்?**

இதற்கு ஒரு நீண்ட பதில் தேவைப்படுகிறது. கடவுள் துவக்கத்தில் மனிதனை படைக்கும்போது அவனை தனது சாயலாகப் படைத்தார் (தொநூ 1:26) தான் படைத்த மனிதன் தன்னோடு இருக்க வேண்டும் என்று படைத்தார். தான் படைத்த அனைத்தின்மீதும் அவனுக்கு ஆளும் அதிகாரத்தை வழங்கினார் (தொநூ 1:28) இதைக்கண்டு பொறாமைக்கொண்ட தீயவன் நம்முடைய ஆதிப்பெற்றோரை ஏமாற்றி அவர்களை பாவம் செய்ய வைக்கிறான். இதன் காரணமாக அவர்கள் கடவுளின் கோபத்திற்கும் சாபத்திற்கும் ஆளாயினர். மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையே இருந்த உறவு துண்டிக்கப்படுகிறது. ஆனாலும் தான் படைத்த மனிதன்மீது இரக்கம் கொண்ட கடவுள் அவனை மீட்பதற்கு முழு மீட்பை அனுப்புவதாக அன்றே வாக்களித்தார் (தொநூ 3:15).

இந்த மீட்பர் வேறு யாரும் அல்ல, அவர்தான் கடவுளின் திருமகனும் நம் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்து. இவரை அனுப்ப சித்தம் கொண்ட கடவுள் அதற்காக மனிதனை ஆயத்தப்படுத்துகிறார். நீதி தலைவர்கள், இறைவாக்கினர்கள், அரசர்கள் என்று பலரை அனுப்பி மக்களை ஆயத்தப்படுத்துகின்றார்கள். இதைத்தான் பழைய ஏற்பாடு முழுவதும் பார்க்கிறோம். இனி எவரையும் நம்பி அனுப்ப முடியாத சூழ்நிலை ஏற்பட்டபோது கடவுள் தம் மகன் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார். தம் சித்தத்தை நிறைவேற்ற இயேசு ஒருவரைத் தவிர யாருமே இல்லை என்கிற சூழ்நிலையில்தான் இயேசு இவ்வுலகில் வந்து பிறக்கின்றார். கடவுள் மனிதன்மேல் வைத்த அன்பின் நிமித்தமாக தன் மகனை இவ்வுலகிற்கு அனுப்புகிறார் (யோவா 3:16).

இயேசு இவ்வுலகில் உதித்த அந்த கால கட்டத்தில் இஸ்ராயேல் மக்கள் உரோமை பேரரசர் சீசரின் அதிகாரத்தின்கீழ் அடிமைகளாக இருந்தனர்.அவர்களுக்கு மத சுதந்திரம் மட்டும் வழங்கப்பட்டு

இருந்தது. ஆனால் அரசியல் சுதந்திரமோ, பொருளாதார சுதந்திரமோ வழங்கப்படவில்லை. மதத்தலைவர்களே பெரியவர்களாக மதிக்கப்பட்டனர். பழைய ஏற்பாட்டில் மோசேயின் பத்து கட்டளையின் சட்டங்களைக்காட்டி மக்களை பயமுறித்தியும், தண்டித்தும் மக்களை மதத்தலைவர்கள் அடிமைப்படுத்தி வைத்திருந்தனர். மதத்தின் பெயராலும் கடவுளின் பெயராலும் அடிமைப்பட்டுக்கிடந்த மக்கள் விடுதலைக்காக ஏங்கி நின்ற காலம் இது. விடுதலைக்காக போராடியவர்கள் மதத்தலைவர்களால் எளிதில் அடக்கப்பட்டனர் அல்லது அழிக்கப்பட்டனர்.

மக்களை விடுதலை நோக்கி வழிநடத்த வேண்டிய தலைவர்களே அவர்களை அடிமைப்படுத்தி பயமுறுத்தி, கொடுமைப்படுத்தி, மதத்தின் பெயரால் சுரண்டிக்கொண்டு இருந்ததால் மக்களை மீட்பதற்கு இனி எவரையும் அனுப்ப முடியாத சூழல் உண்டானது. இதனால் அநீதிக்கு எதிராக குரல் எழுப்பவும், மக்களை வழிநடத்தவும் அடிமைத்தனத்திற்கு எதிராக அடக்குமுறைகளுக்கு எதிராக போராடும் உணர்வுகள் மக்களுக்கு வழங்குவதற்காகவும் இயேசு இவ்வுலகில் வந்து பிறப்பது அவசியமானது.

ஆண்டவரின் ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினார் (லூக் 4:18,19) என்கிற இறைவாக்குப் பகுதியிலிருந்து இயேசுவின் பணி என்ன என்பது நமக்கு விளங்குகிறது. இப்பணியைத்தான் அவர் தன் வாழ்வில் செய்து காட்டினார். இப்பணி தன்னுடைய சீடர்கள் மூலம் தொடரவேண்டுமென இயேசு விரும்பினார்.

"கிறிஸ்தவம்" வளர "கிறிஸ்து" மீண்டும் பிறப்பது அவசியம். இந்த உலகில் அவர் மறுபடியும் பிறக்க மாட்டார். ஆனால் நம் உள்ளங்களில் அவர் மீண்டும் பிறக்க வேண்டும் கிறிஸ்துவின் "மனநிலை" நம்மில் உருவாக வேண்டும் (பிலி 2:5) கிறிஸ்துவின் இயல்புகளை அணிந்துக்கொள்ள வேண்டும் (கொலோ 3:12) பழைய இயல்புகளைக் களைந்து புதிய படைப்புக்களாக மாறவேண்டும் (எபே 4:24) கிறிஸ்துவின் வார்த்தை என்கிற வித்து நமக்குள் இருந்தால் கிறிஸ்தவம் தழைக்கும், பிழைக்கும், நம்மிலே கிறிஸ்து மறுபடி பிறக்கட்டும். கிறிஸ்தவம் இவ்வுலகில் தழைக்கட்டும், கிறிஸ்துவின் சாட்சிகளாக மாறுவோம். சாட்சிகளாக வாழுவோம்.

## 2. கிறிஸ்துமஸ் தாத்தா - வரலாறும் பொருளும்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

கடவுள் தந்த அழகிய வாழ்வில் படைக்கப்பட்ட ஒவ்வொரு படைப்புக்களும், தன்னுடைய பிறப்பின் மகத்துவத்தினை பிறருக்கு நன்மைகளைப் புரிவதில் மன மகிழ்வும் மனநிறைவும் அடைகின்றன. இதோ இயேசு வரலாற்றை வகுத்து, கி.மு., கி.பி. என இரண்டாக பிரித்து, உலகின்

மீட்பராக சமாதான அரசனாக மனித மாண்பை மீட்டுக்கொடுக்கும் கருணை கடவுளாக பிறப்பெடுத்தார். பிறர் வாட அல்ல, பிறர் வாழ்வே இம்மண்ணில் பிறந்தார். அவர் பிறந்த நாளையே கிறிஸ்துமஸ் விழாவாக கொண்டாடி வருகிறோம். இக்கொண்டாட்டத்தின் சிறப்பான பதிவுகளாக கிறிஸ்துமஸ் கேரல்ஸ், கிறிஸ்துமஸ் குடில், கிறிஸ்துமஸ் மரம், கிறிஸ்துமஸ் தாத்தா என கொண்டாட்டத்தில் இணைந்து விடுகின்றன. இவற்றுள், கிறிஸ்துமஸ் தாத்தா மகிழ்ச்சியின் பகிர்தலின் சின்னமாக ஒளிர்கின்றார்.

## கிறிஸ்துமஸ் தாத்தா தோன்றிய வரலாறு

"சவோ" என்ற சிவப்பங்கி, வெண்தாடி, கைகளில் பலூன், இனிப்புகள், முதுகில் பரிசுப்பொருட்கள் என வரும் ஒருவரைத் தெரியாதவர்கள் யாரும் இல்லை, இருக்கமுடியாது. இவர்தான் "சாந்தகிளாஸ்" கிறிஸ்துமஸ் தாத்தா என்று அழைக்கப்பட்டார். கிளமெண்ட் என்ற அமெரிக்கர்தான் 1822ம் ஆண்டில் கற்பனைப் பெயரில் கிறிஸ்துமஸ் தாத்தாவுக்கு உருகொடுத்தார். பின்பு நிக்கோலாஸ் என்ற துருக்கிய நாட்டைச் சேர்ந்தவரும், கிறிஸ்துமஸ் தாத்தாவுக்கு மற்றொரு உருகொடுத்து வலம் வந்தார். கிறிஸ்துமஸ் தாத்தாவின் உருவத்தை தாமஸ் கேஷ் என்ற கார்ட்டூன் கலைஞர் 1881ம் ஆண்டு வரைந்தார். இவர்தான் "ரெயின் டீர்" என்னும் மான்கள் இருக்கும் வண்டியில் கிறிஸ்துமஸ் தாத்தா வருவதுபோல் படம் வரைந்தார். இந்த மான்கள் பறக்கும் மான்கள். ஆங்கிலத்தில் இதை "ரெயின் டீர்" என்று சொல்வார்கள். பறக்கும் மானில் கிறிஸ்துமஸ் தாத்தா சென்றதாக கதைகள் கூறுகின்றன. கடும் குளிர் நிறைந்த துருவப் பிரதேசங்களில் பறக்கும் மான்கள் உள்ளன. இந்த அபூர்வ மான்களைக் கிறிஸ்துமஸ் தாத்தாவின் வாகனமாக எண்ணி வியக்கின்றனர். அமெரிக்காவில் இன்டியானா என்னுமிடத்தில்கிறிஸ்துமஸ்தாத்தாவிற்குசிலையும்அமைக்கப்பட்டுள்ளது.

"சாந்தகிளாஸ்" இந்த பெயர் 4ம் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்த துருக்கி நாட்டிலுள்ள மீரா நகரின் ஆயரான நிக்கோலாஸ் என்பவரின் பெயரிலிருந்து உருவானது. இது செயின்ட் நிக்கோலாஸ் என்னும் டச்சு வார்த்தையிலிருந்து வந்தது. நெதர்லாந்து மற்றும் பிற பகுதிகளில் அவர் இறந்த நாளாம் டிசம்பர் 6, இவரின் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. அதுவே அவர்களுக்குப் பரிசு வழங்கும் விழாவாகவும் இருந்தது. முதன் முதலாக கிறிஸ்துமஸ் தாத்தா பரிசு கொடுக்கும் விழா, நியுயார்க் நகரில் வாழ்ந்த ஆங்கிலேயரால் கொண்டாடப்பட்டது. இவர்கள் இவ்வாறு கொண்டாடும் முறையை டச்சுக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள். சாந்தாகிளாஸ் என்ற பெயரை Sink Kalas என்று மாற்றினார்கள். இந்த விழாவை அமெரிக்கர்கள் கொண்டாடும்பொழுது Sink Kalas என்ற பெயர் மருவி Santa Claus என்ற பெயரில் வழங்கப்பட்டது. Sink Kalas என்ற விழாவை அமெரிக்கர்கள் கிறிஸ்துமஸ் விழாவோடு தொடர்புபடுத்தி தாத்தா வேடத்தில் இருக்கும் ஒருவர் சிறுவர்களுக்குப் பரிசு பொருட்கள் கொடுக்கும் விழாவாகக் கொண்டாடினர். இந்த பழக்கம்தான் இன்று வழக்கமாகி உலகெங்கிலும் கொண்டாடப்படுகிறது.

## கிறிஸ்துமஸ் தாத்தா - இதன் பொருள்

கிறிஸ்துமஸ் மனிதரின் பிறப்பு விழா அல்ல, இறைவனே மனிதனாக மனுவுருப் பெறுகின்ற விழா. இறைவன் தம்மை மனிதனோடு நம்மிடம் கொண்டதுபோல மனிதன் பிற மனிதனோடு பகிர்வு மனப்பான்மையில் வெளிவருவது இந்த கிறிஸ்து பிறப்பு விழாவின் உன்னத மகிழ்வு ஆகும். பகிர்ந்து வாழும்போது வாழ்வு பிறக்கிறது. இந்த பகிர்வினைத்தான் கிறிஸ்துமஸ் தாத்தா நமக்கு உணர்த்துகிறார். கிறிஸ்து நம் உள்ளத்தில் பிறக்கவும், பிறருடைய உள்ளத்தில் இயேசுவைப் பிறக்க வைக்கவும் நாம் செய்ய வேண்டிய பகிர்வுகள்:

- பசித்தோருக்கு உணவு பகிர்தல் (லூக் 9: 10-17)
- ஆடையற்றோருக்கு ஆடை பகிர்வு (மத் 25:36)
- மகிழ்ச்சியைப் பகிர்தல் (பிலி 2:18)
- நோயுற்றோருக்கு ஆறுதல் பகிர்வு (மத் 25:36)
- அகதிகளுக்கு அடைக்கல பகிர்வு (மத் 25:35)
- உடல் உறுப்புகள் பகிர்வு (லூக் 22: 19-20)
- அதிகாரப் பகிர்வு (யோவா 13:14)

இப்படி பல பகிர்வுகளை செய்யும்போது நாம் கிறிஸ்து பிறந்துவிட்டார் என்ற செய்தியை இந்த உலகிற்கு அறிவிப்போம். அதுமட்டுமல்லாது கிறிஸ்துவையே பிறருக்கு நாம் பகிர்ந்து கொடுக்கிறோம். பகிர்தலைப் பற்றி மகாத்மா கூறும்போது, நம்மிடம் இருப்பது பற்றாக்குறையல்ல, பகிராக் குறையே என்கிறார். புனித அன்னைத் தெரேசா கூறுவதைப்போன்று, நமக்குத் தேவையற்றதைப் பிறருக்குக் கொடுப்பது பகிர்வல்ல என்று கூறுகின்றார். நாம் பிறருக்கு நம்முடைய இதயத்தையும், ஆன்மாவையும் பகிர்ந்தால் அதுவே கிறிஸ்துவின் கிறிஸ்தவர்களின் பகிர்வாகும். இன்றைய நவீன உலகில் பகிர்வு என்பதை நாம் ஒரு பொருட்டாக கருதுவது கிடையாது, எப்போது நம்மிடம் இருக்கின்ற சுயநலம் என்ற வெளிவேடத் தீ அழிக்கப்படுகின்றதோ அப்போதுதான் பகிர்வு என்ற ஒளியானது நம்மிடமிருந்து சுடர்விட்டு நம்முடைய உள்ளத்தில் ஒளிதரும். புறப்படுவோமா...

## 3. தூய குவாதெலூப் அன்னையின் அற்புதம்

திரு. ஜான் அலெக்சாண்டர்

குவாதெலூப் அன்னையின் புதுமைகளில் மிக முக்கியமாக அனைவராலும் வியந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட புதுமையைதான் இப்போது நாம் படிக்கவிருக்கிறோம்.

டெனோசிட்லன் - இது தற்போதைய மெக்ஸிக்கோ நகரமாக விளங்குகிறது. இதிலுள்ள ஒரு கிராமம் பெயர் காட்டில்லன். இங்குதான் 1474ம் ஆண்டு யுவான் டியோகோ என்பவர் பிறந்தார். மிகவும் கடின



உழைப்பாளி, 1525ம் ஆண்டு கிறிஸ்தவரானார். பூர்வீக இந்தியக் குடிகளில் முதலில் மனம்மாறி திருமுழுக்குப் பெற்ற இத்தம்பதியினர் தவறாமல் தினமும் திருப்பலிக்கு சென்றார்கள். 1531ல் டிசம்பர் 9ம் நாள் சனிக்கிழமை திருப்பலிக்கு புறப்பட்ட யுவான், டெப்பியக் மலை பாதையில் நடந்து சென்றுகொண்டிருக்கையில் ஒரு மெல்லிய ஒலி கேட்டார். ஒரு பெண் அசாதாரண ஒளியில் தோன்றினார். "யுவான் மிக எளிய என் மகனே, எங்கே போகிறாய்" என்றார் அப்பெண். அதற்கு அவர் தான் திருப்பலிக்கு போவதாக கூறியதும் உடனே அப்பெண் தன்னை வெளிப்படுத்தினார். "நான்தான் கன்னி மரியா. நமக்கு உயிரைத் தந்தவரும் அனைத்தையும் படைத்தவருமான ஒரே கடவுளின் தாய். எனக்காக இங்கே ஒரு ஆலயம் கட்ட வேண்டும். என்னுடைய அன்பு, இரக்கம், சகாயம், பாதுகாப்பு அனைத்தின் சாட்சியாக அது இருக்க வேண்டும். என்னை நோக்கிக் கதறி அழுவோருக்கு நானே இரக்கம் மிகுந்த அன்னை. அவர்களுடைய துயரம், வேதனை, அழுகை, புலம்பல் அனைத்தையும் நான் கேட்கிறேன். எனவே உடனே டெனோசிட்லனில் உள்ள ஆயரைச் சந்தித்து என் விருப்பத்தை தெரிவி" என்றார்

டியோகோ சென்று ஆயரை சந்தித்தார். ஆனால் டியோகோவின் குரலுக்கு முழுமையாக செவிமடுக்காமல், "நான் யோசிக்கிறேன். இன்னொரு முறை வா" என்று அனுப்பிவிட்டார் ஆயர். மனம் வெதும்பிய டியோகோ தான் காலையில் கண்ட அதே இடத்தில் மீண்டும் அன்னையைக் கண்டார். (9-12-1531). அன்னை முதலில் பயன்படுத்திய நினா மியா அதாவது "என்னுடைய குழந்தையே" என்று சொல்லி செபிக்க ஆரம்பித்தார். மறுபடியும் ஆயரைச் சந்திக்கச் செல்லுமாறு அன்னை பணித்தார்.

மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் ஆயரைச் சந்தித்தார். "அன்னையின் ஏதாவது அடையாளம் பெற்று வந்தால் நம்புகிறேன்" என்று சொல்லி ஆயர் இவரை திருப்பி அனுப்பிவிட்டார். மீண்டும் காட்சி கொடுத்த (10-12-1531) அன்னையிடம் தெரிவித்தார் டியோகோ. அன்னையும் மறுநாள் வரச்சொன்னார். அதற்குள் டியோகோவின் சித்தப்பாவிற்கு உடல்நிலை மோசமானதால், நோயில்பூசுதல் வழங்க குருவானவரை அழைத்துவரப் புறப்பட்டார். வழக்கமான வழியில் சென்றால் மாதா வழிமறிப்பார் என்பதால் வேறு பாதையில் சென்றார் டியோகோ. அன்னை அங்கும் தோன்றினார் (12-12-1531). "என் மீது நம்பிக்கை இல்லையா" என்று கேட்டார். "இந்நேரம் உன் சித்தப்பா நலமுடன் இருப்பார். நான் உனக்கு முதல்முறை காட்சிக்கொடுத்த இடத்திற்குச் சென்று பார். அங்குள்ள பூக்களை பேராயரிடம் போய் கொடு" என்றார்.

அன்னை சொன்னபடியே பூக்களை ஒரு துணியில் கட்டி எடுத்துக்கொண்டு சென்றார். காவலர்கள், "கையில் என்ன இருக்கிறது" என்று மிரட்டி அவிழ்த்துப் பார்த்தனர். பூக்கள் வரைந்த துணியாக அது காட்சி கொடுத்தது. ஆயரிடம் சென்று முடிச்சை அவிழ்த்தபோது ஸ்பெயினில் மட்டுமே பூக்கும், டெனோசிட்லனின் (மெக்ஸிக்கோவின்) வறண்ட நிலப்பகுதியில் அதுவும் அப்போதைய கடுங்குளிர் காலத்தில் பூக்காத ரோஜா மலர்கள் விழுந்தன. அத்துணியில் அன்னையின் திருவுருவம் இருந்தது. உடனே எல்லோரும் மண்டியிட்டு வணங்கினார்கள். எனக்கு ஆலயம் எழுப்பி என்னை குவாதலூப் மாதா என்று அழைக்க வேண்டும் என்று மரியா கேட்டுக்கொண்டபடி அதே பெயரில் அன்னை அழைக்கப்படுகிறார். ஆலயத்தில் தங்கிய டியோகோ துறவி போலவே மிகுந்த தாழ்ச்சியுடன் வாழ்ந்தார். மாதாவின் காட்சியை விளக்குவதும், மறைக்கல்வி கற்பிப்பதுமாக தன் வாழ்வைக் கழித்தார். புனிதராக உயர்த்தப்பட்ட இவர் முதன்முதல் காட்சி கண்ட டிசம்பர் 9ம் நாளையே டியோகோவின் திருநாளாகவும் திருஅவை நினைவுகூறுகின்றது.

**"அன்னையின் திருநாமம் சொல்வோம் எல்லா நாளும் வளமாக வாழ்வோம்"**

## 4. திருக்குடும்ப திருவிழா தரும் பாடங்கள்

திரு. லூயிஸ் சகாயராஜ்

கிறிஸ்து பிறப்பில் மகிழ்ந்திருக்கும் இனியோரே, பாலனாய் பிறந்த மீட்பர், நம் பாரங்களைச் சுமந்து தீர்ப்பார், நம் பாவங்களை போக்கி மீட்பார் என்ற நம்பிக்கையில் வாழ்ந்திட வாழ்த்துக்கள். இயேசு-மரி-சூசை எனும் திருக்குடும்பத்தைப் பற்றி நாம் அறியாதவரல்லர். அன்பு-மகிழ்ச்சி-அமைதி என்ற உயரிய பண்புகளின் உறைவிடமாகவே உதாரணமாகவே இயேசு-மரி-சூசை ஆகிய மூவரும் திகழ்கின்றனர். கடவுள் நம்மீது வைத்த முடிவில்லா அன்பினால், அந்த அன்பாகவே இயேசு மனுவுறுவானார். அந்த அன்பு உலகில் வெளிப்பட, நற்செய்தியாகிட தன்னையே மகிழ்வுடன் அர்ப்பணித்த மரியா மகிழ்ச்சியின் மாபெரும் சின்னம், அன்பும், மகிழ்வும் அமைதியின் கரங்களில் பாதுகாப்பாக இருக்க தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் தூய சூசையப்பர். அமைதியின் - பொறுமையின்-கண்ணியத்தின் காவலனான தூய சூசை, அமைதியின் அர்த்தமானவர். இவர்களை விழா எடுத்துக் கொண்டாடி மகிழும் நாம், அவர்கள் தரும் பாடங்களை நமக்குப் பயனுள்ளதாக்கிட முன்வருவோம்.

### பாடம் - 1 அன்பு

தூய ஆவியாரின் கனிகளுள் முதன்மையானது அன்பு. அன்பே கடவுள், அன்பே அனைத்திற்கும் ஆணிவேர், அன்பின்றி எதுவுமில்லை, அன்பால் அனைத்திலும் வெல்லலாம். அன்பிற்கு அடைக்கும்தாழ் உண்டோ, அன்பு அனைத்திலும் சிறந்தது என அன்பைப் பற்றிய புகழைப் பேசி, பாடி, எழுதி மகிழ்கின்றோம். ஆனால் வாழ்வாக்கிட முனைகிறோமா?

அன்பைப்பற்றி பேசி, அன்பைப்பற்றி எழுதி, அன்பைப்பற்றி வாசித்து வாழும் நாம் அந்த அன்பின் ஆழத்தைக் கண்டு, அதன் அனுபவத்தை நம்மில் செயல்வடிவம் பெறச் செய்கிறோமா? இதோ திருக்குடும்பத்தின் மையமான நம் இயேசு இவரே, அன்புக்கு செயல்வடிவமும், செயல்விளக்கமும் கொடுத்தவர்.

அன்புக்காகப் பிறந்தார், அன்புக்காகவே மனுவானார்
அன்பாகவே பிறந்தார், அன்பிற்காகவே வாழ்ந்தார்
அன்பையே போதித்தார், அன்புக்காகவே மரித்தார்
அன்பினாலே உயிர்த்தார், அன்புக்காகவே வாழ்கின்றார்

இப்படிப்பட்ட அன்பை வேறெங்கும் வேறெவரிடமும் கண்டதில்லை. காணப்போவதுமில்லை. தன்னை நம்பியவர்களுக்காக தன்னையே முழுவதும் தாரைவார்த்த நம் இயேசுவைக் கொண்டாடும் நாம், அவர் கொண்டிருந்த அன்பு நிறை மனநிலையைக் கொண்டு வாழ்வோம். நம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் நலமுடன் வாழவும், பாதுகாப்புடன் வாழவும் நம்மை அன்புடன் அர்ப்பணிப்போம். இல்லறமோ, துறவறமோ நம் அன்பால் அதை நல்லறமாக்கிட அன்பின் ஆண்டவரிடம் பாடம் கற்போம். ஏனெனில் அன்பே சிறந்தது.

**பாடம் - 2 மகிழ்ச்சி**

தூய ஆவியாரின் கனிகளுள் இரண்டவாது மகிழ்ச்சி. அன்பு-தன்னை ஏற்றுக்கொண்டவர்களின் உள்ளத்திலும்-இல்லத்திலும்-சமூகத்திலும் கொண்டு வருவது மகிழ்ச்சி. காலைப்பனியும், கதிரோனின் உதயமும், குயில்களின் குரலோசையும் இளந்தளிர்களின் சலசலப்பும் மலர்களின் மலர்ச்சியும், மழலைகளின் புன்சிரிப்பும், சுவையான உணவும், சுகமான வாழ்க்கையும் என நம்மைச் சுற்றிலும் எல்லாமே மகிழ்ச்சி நிறைந்தவையே. ஆனால் நம்மில் மகிழ்ச்சி நம்முடைய மகிழ்ச்சி, நம்மால் மகிழ்ச்சி சாத்தியமாகின்றதா?

- ☸ அனாதை இல்லங்களுக்கும், முதியோர் இல்லங்களுக்கும் உதவிகள் செய்து, அன்பளிப்புகள் வழங்குவது நமது மகிழ்ச்சி. ஆனால் அனாதை இல்லங்களும் முதியோர் இல்லங்களும் இல்லாமல் செய்வதல்லவா நிரந்தர மகிழ்ச்சி.
- ☸ ஏழைகளுடன் கிறிஸ்துமஸ் பகிர்வு நாளை ஆண்டுக்கொருமுறை கொண்டாடுவது நமக்கு மகிழ்ச்சி. ஏழ்மையைப் போக்கி, ஏற்றத்தைக் காணச் செய்வதல்லவா எல்லோருக்கும் மகிழ்ச்சி.
- ☸ பலகாரங்களைப் பலருடன் பகிர்ந்து பிரியாணியைப் பிரியமுள்ளவர்களுடன் பகிர்ந்து கொண்டாடுவது நமது மகிழ்ச்சி. நம்மிடையே நிலவும் பல காரணங்களையும் பிரிவினைகளையும் போக்கிட முனைந்து வெற்றி காண்பதல்லவா உண்மையான மகிழ்ச்சி.

- மரியா என்றால் கசப்பு என்று பொருள்படும் பெயரைத் தாங்கிய நம் அன்னை எல்லோரையும் மகிழ்விக்கும் மாபெரும் நற்செய்தியாம் இயேசுவை அதாவது கடவுளின் அன்பை இவ்வையகம் காணச் செய்ததன் மூலம் மரியா என்றால் மகிழ்ச்சி எனும் இனிமையாய் தன்னையே மாற்றிக் கொண்டார்.
- இன்றும் அநேக மக்களின் கண்ணீரைத் துடைத்து, கரம்பிடித்து கரையேற்றி, களிப்புடன் வாழச் செய்யும் மிகச் சிறந்த பரிந்துரையாளராக நம் அன்னை திகழ்கின்றார்.

**பாடம் - 3 அமைதி**

தூய ஆவியின் கனிகளில் மூன்றாவது முக்கியக் கனி அமைதி. அன்பும், மகிழ்ச்சியும் நிறைந்த குடும்பத்தில் அமைதி கண்டிப்பாக நிலவிடும். ஆழ்ந்த அன்புக்கும், ஆனந்த மகிழ்ச்சிக்கும் அடித்தளமாய் இருந்து தாங்கிப் பிடிப்பது அமைதி. அமைதியின் அலைகளில் ஆண்டவர் அசைவாடுகின்றார். அமைதியாய் இருக்கும் மனங்கள் அன்பை சுவைத்து, மகிழ்ச்சியை தமதாக்கிக் கொள்ளும். பரபரப்பும், ஆர்ப்பாட்டமும் நிறைந்த உலகில் அமைதியைத் தேடி அலையும் நமக்கு...

- இரவின் அமைதி விடியலுக்கு நம்மை அழைத்துச் செல்லும் என்ற நம்பிக்கையோடு உறங்கப் போகும் நம் மனங்கள்
- உழைத்துக் களைத்து, உண்டு மகிழ்ந்து, களைப்பாற, நம் சோர்வு நீங்க நாம் தேடும் அமைதி
- ஆலயத்தில் அமைதி, சமாதானம் என அறிக்கையிட்டு, வாழுமிடத்தில் முரண்பாடுகளோடு முறைத்துக்கொண்டு வாழும் நம் சமூகம்
- ஆளுக்கொரு போக்கில் அடுத்தவர் மனதைக் காயப்படுத்தி, அதை இரசித்துப் பார்க்கும் பொறுமையற்ற கோபங்கள், தாபங்கள்

இதோ திருக்குடும்பத்தின் காவலரான தூய சூசை, இயேசு-மரி எனும் இரு மலர்களையும் கசங்காமல், கருகாமல், வாடாமல், வதங்காமல், கருவிழியாய் காத்தவர் நம் புனிதர். மரியாவின் மானத்துக்கும் இயேசுவின் உயிருக்கும் பாதுகாப்பு அளித்து தன் பொறுமையால் அமைதிக்கு சான்று பகர்ந்தவர். குறைவாகப் பேசி நிறைவான வாழ்வு கண்ட கண்ணியத்தின் காவலன். கடமையை பலனை எதிர்பார்த்து செய்யாத கர்மயோகி தூய சூசையப்பர். இறைவார்த்தையாம் இயேசுவை வார்த்தெடுத்த அன்னை மரியாவின் அற்புதத் துணைவராகி, வார்த்தையான இறைமகனை வளர்த்தெடுத்த அன்புத் தாதையாகி நம் எல்லோருக்கும் அமைதியைக் கற்பிக்கும் ஆசானாகி சிறப்புடன் விளங்கும் தூய சூசையப்பரைப் பின்பற்றி அமைதி எனும் அருட்கொடையை நாமும் கண்டடைவோம். கடவுளின் கரங்களில் அமைதியின் கருவியாய் நாம் திகழ்ந்திடுவோம். நம்மைத் தாக்கும் துயர்களை, துன்பங்களை, சோதனைகளை, சோர்வுகளை வருத்தங்களை, வாட்டங்களை மனதில் இருத்திக் குழப்பத்திற்கு ஆட்படாமல், ஆழ்மன அமைதியில் ஆனந்தம் காண விழைவோம்.

**நிறைவில்...**

திருக்குடும்பத்தின் திருவிழாவைக் கொண்டாடி மகிழும்போது நமது உள்ளத்திலும், இல்லத்திலும் அன்பின் இயேசுவும் மகிழ்வின் மரியன்னையும், அமைதியின் தூய சூசையும் குடிகொள்வர். இவர்களின் பின்னணயில் நம் குடும்பங்களும் திருக்குடும்பங்களாகும். இயேசு-மரி-சூசையின் கரங்களில் நம் வாழ்வையும் ஆன்மாவையும் ஒப்படைப்போம். திருக்குடும்ப சந்நிதி-நம் குடும்ப நிம்மதி.

## 5. திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

1. 1945ம் ஆண்டு முதல், அல்பேனியா நாட்டில் உருவான கம்யூனிசப் புரட்சியில், அனைத்து வழிபாட்டுத் தலங்களும் அங்காடிகளாகவும், விளையாட்டு அரங்கங்களாகவும் மாற்றப்பட்டன. 1946ம் ஆண்டு முதல் 1973ம் ஆண்டு முடிய அங்கு கொல்லப்பட்ட 38 மறை சாட்சிகளை அருளாளர்களாக உயர்த்தும் ஆணையை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கினார். இந்த வன்முறைகளில் தப்பித்த அருள்பணியாளர் நுசநௌவ ஞைஅழஙெ அவர்கள் வழங்கிய சாட்சியம், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கண்களில் கண்ணீரை வரவழைத்தது என்பதும், அருள்பணியாளர் ஞைஅழஙெ அவர்களை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அண்மையில் கர்தினாலாக உயர்த்தியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கன.

2. கத்தோலிக்கத் திருஅவைக்கும் லூத்தரன் உலக கூட்டமைப்பிற்கும் இடையேயுள்ள உறவை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன், அக்டோபர் 31, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், லூத்தரன் உலகக் கூட்டமைப்பின் தலைவர், ஆயர் மவுனிப் யூனான் (Mounib Younanan) அவர்களும், லூண்ட் (Lund) லூத்தரன் பேராலயத்தில் ஓர் அறிக்கையில் கையெழுத்திட்டனர். மோதலிருந்து ஒருங்கிணைப்பிற்குச் செல்லுதல், பொதுவான சாட்சியம் பகர நமது அர்ப்பணம், கிறிஸ்துவில் ஒன்றிப்பு, உலகெங்கும் உள்ள கத்தோலிக்கர்களுக்கும், லூத்தரன் சபையினருக்கும் அழைப்பு என்ற நான்கு பகுதிகளில், கத்தோலிக்கரும், லூத்தரன் சபையினரும் இணைந்து வரும் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

3. உலகளவில் துன்புறும் சிறார் விடயம் குறித்து கலந்துரையாடுவதற்கு நோபல் விருது பெற்ற ஆர்வலர்கள், வருகிற டிசம்பரில், டெல்லியில் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர். டெல்லி, குடியரசுத் தலைவர் மாளிகையில், வருகிற டிசம்பர் 10,11 நாள்களில் நடைபெறவுள்ள கூட்டத்தில், உலகில், குறிப்பாக, போர் இடம்பெறும் பகுதிகளில், இலட்சக்கணக்கான சிறார் துன்புறுவது குறித்து ஆராயப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இக்கூட்டம் குறித்துப் பேசிய நொபெல் அமைதி விருது ஆர்வலர் கைலாஷ் சத்யார்த்தி அவர்கள், போர்கள்,

ஆயுத மோதல்கள் அல்லது வன்முறைக்கு, சிறார் எந்த விதத்திலும் காரணமல்ல, ஆயினும், கொடூரமான சூழல்களில், சிறாரே அதிகம் துன்புறுகின்றனர் என்று கூறினார். உலகில் ஏறக்குறைய 16 கோடியே 80 இலட்சம் சிறார் தொழிலாளர் உள்ளனர், ஐந்துக்கும் 17 வயதுக்கும் உட்பட்ட உலகச் சிறாரில், இச்சிறார் தொழிலாளர் ஏறக்குறைய பத்து விழுக்காட்டினர் என்றும் உலகில் ஏறக்குறைய 55 இலட்சம் சிறார் அடிமைத்தனத்தில் சிக்கியுள்ளனர் என்றும், தெரிவித்தார் சத்யார்த்தி.

4. இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்குமிடையே மோதல் போக்குகள் அதிகரித்து வரும் சூழலில் இரு நாடுகளிடையே அமைதிக்காக கத்தோலிக்கத் தலைவர்கள் புது டெல்லியில் கூடிச் செபித்தனர். இந்திய ஆயர் பேரவைத்தலைவர் கர்தினால் பசிலியோஸ் கிளீமிஸ் அவர்கள் இந்தியாவின் அனைத்து 168 மறைமாவட்டங்களும் இரு நாடுகளின் அமைதிக்காகச் செபிக்க வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

5. இலங்கையில் மத நல்லிணக்கத்திற்கு உதவும் நோக்கில், உலகிலேயே மிக உயரமான செயற்கை கிறிஸ்துமஸ் மரம் ஒன்றை அமைக்க உள்ளதாக அந்நாட்டின் அமைச்சர் ஒருவரும் துறைமுகத் துறையின் கத்தோலிக்க அமைப்பும் இணைந்து அறிவித்துள்ளன. காடுபோன்ற ஒரு சூழலை செயற்கையாக உருவாக்கி அதில் 6 மீட்டர் உயரமுடைய கிறிஸ்துமஸ் தாத்தா உருவத்தை நிறுத்தி, அதனருகே 114மீட்டர் உயரமுடைய செயற்கை கிறிஸ்துமஸ் மரத்தை அமைக்க உள்ளதாக அமைச்சர் அர்ஜீனா இரணதுங்காவின் துறைமுக நல ஆதரவு அமைப்பும், துறைமுக கத்தோலிக்க அமைப்பும் தெரிவித்துள்ளன. கின்னஸ் சாதனையாக அமைக்கப்பட உள்ள இந்த கிறிஸ்துமஸ் மரத்தில் 5 இலட்சம் வண்ண விளக்குகளும் பொருத்தப்பட உள்ளன. 2009ம் ஆண்டு மெக்சிகோவில் நிறுவப்பட்ட 90மீட்டர் உயர கிறிஸ்துமஸ் மரமே இதுவரை அதிக உயரமுடையதாக கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

6. இந்தியாவின் கேரளா மாநிலத்திலுள்ள வெராப்பொளியின் பேராயராக, ஆயர் ஜோசப் களத்திப்பரம்பில் அவர்களை நியமித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். வெராப்போளி உயர் மறை மாவட்டத்தின் முன்னாள் பேராயர், பிரான்சிஸ் கல்லரக்கல் அவர்கள் பணி ஓய்வுப்பெற்றுள்ளதைத் தொடர்ந்து திருத்தந்தையால் புதிய பேராயராக அறிவிக்கப்பட்டுள்ள ஆயர் களத்திப்பரம்பில் அவர்கள், 2011ம் ஆண்டு முதல் குடியேற்றதாரர் மற்றும் பயணிகள் திருப்பீட அவையின் செயலாளராகப் பணியாற்றி வந்தவர். புதியப் பேராயர் களத்திரப்பரம்பில் அவர்கள் 1952ம் ஆண்டு வடுதலா என்னுமிடத்தில் பிறந்து வெராப்பொளி உயர் மறைமாவட்டத்தில் 1978ம் ஆண்டு அருட்பணியாளராக திருப்பொழிவுச் செய்யப்பட்டார். பின்னர், 2002ம் ஆண்டு முதல் 2011ம் ஆண்டு வரை கேரளாவின் கோழிக்கோடு ஆயராகப் பணியாற்றியுள்ளார்.

## சுடர் வாசகர் போட்டி 29 முடிவுகள்

1. தூய சார்லஸ் பொரோமியோ
2. திருப்பாடல்கள் 17:3
3. திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர்
4. இரண்டு கூறுகளை கொண்டது 1) இரக்கத்தின் அரசு 2) மகிமையின் அரசு
5. பாடகர்களின் பாதுகாவலி
6. மூன்று ஆயர்கள்
7. ஒவ்வொரு நாளும் இறந்தோருக்காக சிறப்பான விதத்திலே யாருமின்றி இருக்கின்ற ஒவ்வொருவருக்காகவும் ஒரு சில நிமிடங்கள் உளமாற செபிப்போம்
8. தூய சார்லஸ் பொரோமியோ
9. இறைவன் நம்மிடையே உள்ளார்
10. தூய தாமஸ்
11. கிறிஸ்து அரசர் பெருவிழா
12. திருத்தந்தை ஆறாம் சின்னப்பர்
13. ஒசேயா 6:6
14. "இளையோர், நம்பிக்கையும் அழைத்தலைத் தேர்ந்து தெளிதலும்"
15. திருமுழுக்கு யோவான்

### சரியான விடையெழுதி பரிசு பெறும் வெற்றியாளர்கள்

1. Sr. Aloysius, Kovai
2. Sr. Benedict Angela, Vyasarpadi
3. Jeyanthi Fernando, Chennai

## சுடர் வாசகர் போட்டி - 30

1. மனம் மாறும் போது உண்டாகும் புதிய பூமியையும் புதிய விண்ணகத்தையும் பற்றி எந்த இறைவாக்கினர் கூறுவதாக ஆசிரியர் கூறுகிறார்?
2. அன்னை மரியாளை "அமல உற்பவி" என்று பிரகடனம் செய்த திருத்தந்தை யார்?
3. அரசன் டயோக்கிளிஷியன் எந்த புனிதையின் தலையை வெட்டி கொன்றான்?
4. மூப்பர் சங்கத்தின் முன் பேசும் போது தூய ஸ்தேவானின் முகம் எப்படி தோற்றமளித்தது?
5. 1170 டிசம்பர் 29ஆம் நாள் பலிபீடத்திலேயே கொலை செய்யப்பட்ட ஆயர் யார்?
6. கிறிஸ்துமஸ் தாத்தா அணியும் அங்கியின் பெயர் என்ன?
7. 1531 டிசம்பர் 9ஆம் நாளன்று அன்னை மரியாள் டியேகோவிடம் பேசிய முதல் வார்த்தை என்ன?
8. லூத்தரன் உலகக் கூட்டமைப்பின் தலைவர் --------------?
9. "கடவுளை அறியாத மக்கள் வசிக்கும் இடம் பூமியில் உள்ளது என்பதை நான் அறிந்தால் உணர்ந்தால் என்னால் அமைதியாய் இளைப்பாற முடியாது" கூறியது யார்?
10. மார்சலினா யாருடைய சகோதரி?
11. குவாதெலூப் அன்னை தூய யுவான் டியேகோவுக்கு எப்பொழுது காட்சி தந்தாள்?
12. தூய திருச்சிலுவை யோவானை தனது சபையிலேயே இருந்து சீர்த்திருத்தும்படி கேட்டுக்கொண்ட புனிதை யார்? எந்த சபை?
13. இயேசுவின் மார்பில் சாய்ந்து கொள்ளும் நெருக்கம் கொண்ட திருத்தூதர் யார்?
14. திருக்குடும்ப திருவிழாவை கொண்டாடலாம் என்று அதிகாரபூர்வமாக அரிவித்த திருத்தந்தை யார்? எப்பொழுது?
15. "நம்மிடம் இருப்பது பற்றாக்குறை அல்ல பகிராக்குறையே" கூறியது யார்?

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

தூய கன்னி மரியா இறைவனின் தாய் / புத்தாண்டு
ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா
இயேசுவின் திருமுழுக்கு விழா
அருளாளர் தேவசகாயம் பிள்ளை
தூய ஜோசப் வாஸ்
தூய செபஸ்தியார்
தூய ஆஞ்ஞேசம்மாள் கன்னி
திருத்தூதர் பவுல் மனமாற்றம்
தூய தீத்து, தூய திமோத்தி
தூய தாமஸ் அக்குவினாஸ்
தூய ஜான் நியுமேன்
தூய ஜான் போஸ்கோ
பொங்கல்

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

புத்தாண்டில் புது வாழ்வு நோக்கி
ஜான் போஸ்கோவின் வாழ்வில் மரியன்னை
தேவசகாயம் - இன்று தரும் பாடம்
திருச்சபை செய்திகள்

**தீபகச் சுடர்**

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதிப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரை பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:.....................................
முகவரி:...................................
..........................................
..........................................
..........................................
தொலைப்பேசி: ..................

## டிசம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வி | | எசா26:1ஆ-6 | மத்7:21,24-27 |
| 2 | வெ | | ஏசா29:17-24 | மத்9:27-31 |
| 3 | சனி | புனித பிரான்சிஸ் சவேரியார் | 1கொரி9:16-19,22-23 | மாற்16:15-20 |
| 4 | ஞா | திருவருகைக் கால 2ம் ஞாயிறு | I எசா11:1-10<br>II உரோ15:4-9 | மத்3:1-12 |
| 5 | தி | | எசா35:1-10 | லூக்5:17-26 |
| 6 | செ | புனித நிக்கோலாஸ் | எசா40:1-11 | மத்18:12-14 |
| 7 | பு | புனித அம்புரோஸ் | எசா40:25-31 | மத்11:28-30 |
| 8 | வி | தூய கன்னிமரியாவின் அமலோற்பவம் | I தொநூ3:9-15,20<br>II எபேசி1:3-6,11-12 | லூக்1:26-38 |
| 9 | வெ | | எசா48:17-19 | மத்11:16-19 |
| 10 | சனி | | சீராக்48:1-4,9-11 | மத்17:10-13 |
| 11 | ஞா | திருவருகைக் கால 3ம் ஞாயிறு | I எசா35:1-6அ,10<br>II யாக்5:7-10 | மத்16:2-11 |
| 12 | தி | புனித குவாதெலுப் அன்னை | எண்24:2-7,15-17அ | மத்21:23-27 |
| 13 | செ | புனித லூசியா | செப்3:1-2,9-13 | மத்21:28-32 |
| 14 | பு | புனித திருச்சிலுவை யோவான் | எசா45:6ஆ-8,18,21ஆ-25 | லூக்7:19-23 |
| 15 | வி | | எசா54:1-10 | லூக்7:24-30 |
| 16 | வெ | | எசா56:1-3,6-8 | யோவா5:33-36 |
| 17 | சனி | | தொநூ49:1-2,8-10 | மத்1:1-17 |
| 18 | ஞா | திருவருகைக் கால 4ம் ஞாயிறு | I எசா7:10-14<br>II உரோ1:1-7 | மத்1:18-24 |
| 19 | தி | | நீதி13:2-7,24-25 | லூக்1:5-25 |
| 20 | செ | | எசா7:10-14 | லூக்1:39-45 |
| 21 | பு | | இனி.பா2:8-14 | லூக்39-45 |
| 22 | வி | | 1சாமு1:24-28 | லூக்1:46-56 |
| 23 | வெ | | மலாக்3:1-4:4:5-6 | லூக்1:57-66 |
| 24 | சனி | | 2சாமு7:1-5,8ஆ-12,16 | லூக்1:67-79 |
| 25 | ஞா | கிறிஸ்து பிறப்பு பெருவிழா | | |
| 26 | தி | புனித முடியப்பர் | திபணி6:8-10:7:54-60 | மத்10:17-22 |
| 27 | செ | புனித யோவான் | 1யோவா1:1-4 | யோவா20:2-8 |
| 28 | பு | மாசில்லா குழந்தைகள் | 1யோவா1:5-2:2 | மத்2:13-18 |
| 29 | வி | புனித தாமஸ் பெக்கட் | 1யோவா2:3-11 | லூக்2:22-35 |
| 30 | வெ | திருக்குடும்ப விழா | I சீராக்3:2-7,12-14அ<br>II கொலோ3:12-21 | மத்2:13-15,19-23 |
| 31 | சனி | | யோவா2:18-21 | யோவா1:1-18 |